# PSchool

# பழகு தமிழ் - பயிற்சி ஏடு

## 2

## PSchool Learning App

Simple and effective learning activities that kids love.

Practice Makes the Learning Permanent.

Our app is affordable. Just Rs 500 per year.




*Scan the QR code given below, or visit our website www.pschool.in*

info@pschool.in

7938-239-039

Not For Sale!

# வார்த்தை

எழுத்துக்களை சேர்த்து வார்த்தை அமைக்கவும்.

1. த வு க :
2. ல ம் கோ :
3. ம் மா த :
4. ழ மை கி :
5. வி தை க :
6. கை மூ லி :
7. வு தொ லை :
8. ரை தா ம :
9. ர டி க :
10. லி இ ட் :

---

1. ம் ம ர :
2. ம் ம ன :
3. ள ம் கு :
4. நீ ள ம் :
5. ள ம் வ :
6. ம் ஈ ர :
7. ளி ப ள் :
8. ல் லி ப :
9. க ம் ந :
10. க ம் நா :

---

1. கு க மு :
2. ம் நீ ல :
3. ம் பு பா :
4. க ம் மு :
5. ரி சு ப :
6. ப் பு உ :
7. வி ரு கு :
8. ற கு பி :
9. ம் ப ண :
10. ம் பா ச :

---

1. மி ழ் த :
2. ஞ் சி க :
3. ஞ் சி இ :
4. மா அ ம் :
5. பா ல் த :
6. வ று த :
7. த் தை ந :
8. ச் சை ப :
9. க் கு நா :
10. ட் டு த :

---

1. ட ம் ப :
2. ம் பா ன :
3. ளே உ ள் :
4. யே வெ ளி :
5. து மு த் :
6. கு தி த :
7. கு தி தொ :
8. ர ம் உ :
9. ண் மை உ :
10. யி ல் கு :

---

1. லி ம ல் :
2. த் து வா :
3. ளி ர் த :
4. ல் லி அ :
5. ந் தை ஆ :
6. கு ப ட :
7. ளை த வ :
8. ண் டு ந :
9. ல் ம யி :
10. தி ரை கு :

---

1. ன் றி ப :
2. ர ட் கா :
3. ளை மா து :
4. பு பா ம் :
5. ணி ல் அ :
6. ல் ஈ ச :
7. ம் கா க :
8. டி க ர :
9. டு பூ ண் :
10. த லை மு :

---

1. டி வ ண் :
2. ண் டு வ :
3. ட் டை மு :
4. ட் டை மூ :
5. ல் மு ய :
6. ய ல் வ :
7. ர் ப யி :
8. ர் உ யி :

9. ர் த யி :
10. யி று க :

---

1. ள ம் சோ :
2. ல ம் கா :
3. ம் தா ள :
4. ல் ம ண :
5. பு ப் சி ரி :
6. கு க ழு :
7. ப ம் கோ :
8. ச் சி பூ :
9. து ஐ ந் :
10. று கா ற் :

---

1. ண று கி :
2. ர் கு ளி :
3. ச் கு சி :
4. ட் டு பூ :
5. ண் டு பூ :
6. ற கு இ :
7. ட ல் க :
8. வு இ ர :
9. க ல் ப :
10. ள் இ ரு :

---

1. மை இ ள :
2. மை மு து :
3. கு ச ங் :
4. கு நு ங் :
5. ல் வி ர :
6. ற ள் கு :
7. கு வி ற :
8. தி ப கு :
9. கு பி ற :
10. ல் வி க :

**எழுத்துக்களை சேர்த்து வார்த்தை அமைக்கவும்.**

1. ர ல் கு :
2. ற கு சி :
3. ண் கு டு :
4. று மு ன் :
5. ன் ப ல :
6. ன் றி ந :
7. ம் நி ஜ :

8. னி க ணி :
9. ள கு மி :
10. சி அ ரி :

---

1. க் கு கொ :
2. ம் இ ட :
3. வி ஞ ர் க :
4. டை ச ட் :
5. ச ந் தை :
6. ன ம் சி :
7. டு கு க :
8. ட ல் உ :
9. து ய வ :
10. மை பெ ரு :

---

1. ற் றி வெ :
2. த ம் ப :
3. ட ல் பா :
4. த னை சா :
5. ன் பு அ :
6. ழ கு அ :
7. ழ ம் ப :
8. ரு து வி :
9. ல் எ ழி :
10. வ ல் ஆ :

---

1. ழ ம் ஆ :
2. ம் பா த :
3. வி தோ ல் :
4. ழ் பு க :
5. தி க த் :
6. த் பு தி :
7. ந் து ப :
8. ழ் வு தா :
9. ச ம் தே :
10. ம் ப ய :

---

1. மி சி று :
2. ள் வி கே :
3. தி ல் ப :
4. றி ந ன் :
5. ழ ல் நி :
6. ப் தொ பி :
7. ட் டு மொ :

8. பு தோ ப் :
9. ள ம் மே :
10. ள் பொ ரு :

8. ய ம் சா :
9. ங் கை த :
10. ண் டு த :

1. சு வா ரி :
2. ற மை தி :
3. ண ம் கு :
4. வு தீ ர் :
5. ந் தி பூ :
6. ல் தொ ழி :
7. ர வு வ :
8. ச ம் நே :
9. நே ர் மை :
10. தி பா ர :

1. ன எ ன் :
2. னை வி ம :
3. மை பொ று :
4. ன வு க :
5. ளி வு தெ :
6. னை தெ ன் :
7. வு செ ல :
8. வை பா ர் :
9. டை வே ட் :

1. ல் ம யி :
2. க மே ம் :
3. ர் வு தே :
4. ம் சூ ட :
5. ம் ப ல :
6. டை ச ண் :
7. க் கு மு :
8. ர் பெ ய :
9. மை த னி :
10. ப் பை கு :

எழுத்துக்களை சேர்த்து வார்த்தை அமைக்கவும்.

1. ளி வி ண் வெ :
2. வ பு ர் ல :
3. த ன் னி ம :
4. ம் ச ச் அ :
5. ம் ய லை நி :
6. ண ம் ண் எ :
7. ம் ண ண் கி :
8. ன் க ண வ :
9. ண ன் ண் அ :
10. து ந் ரு ம :

1. சு அ ச் :
2. டு பொ ட் :
3. க் தி ப :
4. டு கூ ண் :
5. ட் டி பா :
6. தா த் தா :
7. ம் பி த :
8. க் கா அ :
9. ம் கா ய :
10. ண் ணி அ :

1. ன ல் ன் பி :
2. ல் னா ன் பி :
3. த ம் ணி க :
4. ர ம் தா ஆ :
5. க் கு ள வி :
6. பு ப் டி ம :
7. ட் சி வ ற :
8. டு ப் பு து :
9. ப் பி ள் ஆ :
10. கு ங் ழ கி :

1. ல் தை ய :
2. ன ம் வா :
3. ச ல் வா :
4. ர ம் தூ :
5. ல் செ ய :
6. ட் டை சா :
7. ட் சி க :

1. ம் த ந் த :
2. க ச ம் ங் :
3. ம் க ங் த :
4. பூ ப் பு ரி :
5. த ல் ய் நெ :
6. பு ப் ரி சி :
7. கா உ ர் ட் :

8. ப ஞா ம் க :
9. ஞ் ச ம் ப :
10. ல் மு ன் னா :

---

1. ம் ட ட் வ :
2. ல் ஊ ஞ் ச :
3. பு எ று ம் :
4. ட ப ம் ட் :
5. க் தூ ம் க :
6. ன் வ றை இ :
7. ட வு ள் க :
8. ற் சி ய மு :
9. யி ற் சி ப :
10. ரு க து த் :

---

1. ரை நி த் தி :
2. ணீ க ர் ண் :
3. ரா தி சை ட் :
4. ம் க ங் சி :
5. ங் கு கு ர :
6. தி ந் சா ம :
7. ன் டா ட் த :
8. பு எ று ம் :
9. ரு ந் து பே :
10. ல் ப ப் க :

---

1. ளி த க் கா :
2. சே ரி க ச் :
3. ம் ண ய ப :
4. பு ப் ற சி :
5. ட் ட ம் தோ :
6. பு க ளை ப் :
7. ல் வி ன வா :
8. ம் ர ய உ :
9. ம் யு டி மு :
10. ர ம் ந க :

---

1. ம் ள ள் உ :
2. து மு டி யா :
3. ரு டு இ ட் :
4. யா தி ந் இ :
5. ம் க ளா வ :
6. து யா ரி பு :
7. ம் க வ ட :

8. பா டு சா ப் :
9. டு வே தி ப :
10. த் எ து ழு :

---

1. ல் ன ன் மி :
2. ன ம் மா வி :
3. சி னா ன் அ :
4. ப் பு டி து :
5. ப் த வா ளி பா ம் வி ப :
6. ம ல் லி கை :
7. ரை தி த் யா :
8. றை மு ரை வ :
9. ம் கா கி த :

---

1. து ந் ரு வி :
2. கா தே ய் ங் :
3. தி ம அ னு :
4. ப் இ பு ணை :
5. ம் ம ரா கி :
6. ண் ண ம் வ :
7. ர் னை நீ யா :
8. க உ ம் ல :
9. வ ம் ரு உ :
10. வ ன் சி று :

---

1. ரி பா யா வி :
2. ர ஆ சு ஞ் :
3. ன் வ ய கு :
4. ல் இ ன் ன :
5. ப் பு டி ப :
6. ட் பு சி ர :
7. கு பு தொ ப் :
8. தி ப ரு த் :
9. டி ல் ட் தொ :
10. ந் சொ ம் த :

---

1. த த் ம் ச :
2. ப் பு ரு நெ :
3. ள் ச ஞ் ம :
4. டி வ ம் வ :
5. ழ் து வா த் :
6. ம் ட மி நி :
7. ம் வா க ன :
8. ல சி தி ந் :

9. த ம் இ ய :
10. ப டி ப் எ :
11. ள் க ங் உ :

**எழுத்துக்களை சேர்த்து வார்த்தை அமைக்கவும்.**

1. ண ம ரு ம் தி :
2. க் க ம் ப த :
3. ல் கூ க ழா ங் :
4. ள ம் த் ம த :
5. ம் ர ஆ ல ம :
6. டி ட் ள் நா க :
7. ள் க க ரு வி :
8. ட் தொ டி ன் மீ :
9. ல் ய ண் டி உ :
10. ய வி வ ம் சா :

---

1. க வை ள் ற ப :
2. டி ட ம் ட் க :
3. பி க் ந கை ம் :
4. தி ப் பெ ண் ம :
5. ச் ழ் கி சி ம :
6. ர் சி ண உ ச் :
7. ம் பு க த் த :
8. ல் வி வி தை த் :
9. ளை ட் டு யா வி :
10. க க் ம் ழ ப :

---

1. ம் கு ப ம் டு :
2. ம் ள ச ம் ப :
3. க் க ம் வ ண :
4. ல் ய றி வி அ :
5. ப் த் தி பா ச :
6. ள் வ வ ர் ளு :
7. ள் மு ங் கி ள :
8. த் த ம் று நி :
9. டி டு பி ண் க :
10. ழ் கே கு வ ர :

---

1. ணி ச த ர் பூ :
2. ழ ம் ப ம் மா :
3. ம் ப் ப ப லா ழ :
4. கி ந் து ம ழு :
5. வ டி தி மி ண் :
6. ங் ய ம் வெ கா :

7. ம் ட ட் ஒ க :
8. ழ வா ம் ழை ப் ப :
9. றி ப் க ணி பொ :
10. ழ் நா த டு மி :

**எழுத்துக்களை சேர்த்து வார்த்தை அமைக்கவும்.**

1. யி று ஞா :
2. க ங் ள் தி :
3. ய் வா வ் செ :
4. த ன் பு :
5. யா வி ன் ழ :
6. ளி வெ ள் :

---

1. தி சி ரை த் :
2. சி வை கா :
3. னி ஆ :
4. டி ஆ :
5. ணி ஆ வ :
6. சி டா ர ட் பு :
7. சி ப ப் ஐ :
8. த் கை தி ர் கா :
9. ழி மா ர் க :
10. சி மா :
11. ங் கு னி ப :

---

1. ரி ஜ ன வ :
2. ப் ர வ ரி பி :
3. ச் மா ர் :
4. ல் ர ப் ஏ :
5. ஸ் ட் க ஆ :
6. ர் செ ம் ப் ட ப :
7. க் ப ர் டோ அ :
8. ப ம் வ ர் ந :
9. ச ம் ப ர் டி :

---

1. ள் தி ய் செ க :
2. ர ம் லை தூ தொ :
3. ளி ம் ச வெ ச் :
4. ரி ல ன் க கா :
5. ய த ம் வெ ந் :
6. மை றை ச ய ல :
7. லை சா ழி தொ ற் :
8. து பொ கு க் போ ழு :
9. நா ள் த ந் ற பி :

10. வி டு கு ட் சி க் ரு :

1. ள் வி ல ங் கு க :
2. ன் ப ண் தி ம் ட :
3. ம் ல க ஞ் ச அ :
4. த த் றி வு கு ப :
5. ர் ம் ளி ன கு பா :
6. ச் ம் சா ர லா க :
7. க க் னி ணி டி ம :
8. ர் போ ம் ள க் க :
9. ட ம் ட் மூ க மே :
10. க் ப ம் கூ ட ள் ளி :

1. ம் கொ ய் யா ப் ப ழ :
2. கா ய தி ந் ரி சூ :
3. தி செ த் ம் ப ரு :
4. டி ண் வ ர் ட தொ :
5. க் ழ கு உ ளை கி ரு ங் :
6. சு கோ மு டை ட் :
7. கா வெ ய் க் ள் ள ரி :
8. மி டா ரு ம் ண் கா க :
9. க் ரை கு ரி வ தி :
10. கி ல ம் மி ங் தி :

பொருத்துக - பொருள் தருக

| | |
|---|---|
| அறிவு | சட்டை |
| அங்கம் | சோர்வு |
| அங்கி | உறுப்பு |
| அசதி | வீட்டின் பகுதி |
| அறை | ஞானம் |

| | |
|---|---|
| கலம் | வளமை |
| களம் | நிலா |
| வலம் | கருவி |
| வளம் | வலது |
| சந்திரன் | இடம் |

| | |
|---|---|
| பலம் | கனி |
| பழம் | வலிமை |
| அறம் | ரம்பம் |
| அரம் | பக்கத்தில் |
| அருகில் | தர்மம் |

| | |
|---|---|
| பரி | கரும்பு |
| பறி | சத்தம் |
| கழை | பூ பறித்தல் |
| ஒளி | குதிரை |
| ஒலி | வெளிச்சம் |

| | |
|---|---|
| அகிலம் | கட்டளை |
| அதிகம் | விருப்பம் |
| ஆணை | உலகம் |
| ஆயுதம் | மிகுதி |
| ஆவல் | கருவி |

| | |
|---|---|
| ஆனந்தம் | கடன் |
| இரவல் | துன்பம் |
| இன்னல் | அழகு |
| எழில் | சண்டை |
| கலகம் | மகிழ்ச்சி |

| | |
|---|---|
| சன்மானம் | உறுதி |
| சாதனை | வெகுமதி |
| சிந்தை | வெற்றி |
| செல்வந்தர் | எண்ணம் |
| திடம் | பணக்காரர் |

| | |
|---|---|
| துயர் | வறட்சி |
| நங்கை | விளைவு |
| பஞ்சம் | பெண் |
| பாதிப்பு | உலகம் |
| பார் | துன்பம் |

| | |
|---|---|
| புரவி | திடல் |
| பேழை | உடல் |
| மாரி | பெட்டி |
| மைதானம் | மழை |
| மேனி | குதிரை |

| | |
|---|---|
| வியாபாரி | உலகம் |
| விவசாயி | சூழ்ச்சி |
| வையம் | இளம் இலை |
| தந்திரம் | வணிகர் |
| துளிர் | உழவர் |

| | |
|---|---|
| சுத்தம் | தூரம் |
| தைரியம் | தூய்மை |
| தொலைவு | துணிவு |
| நித்தம் | தலைமுறை |
| பரம்பரை | நாள்தோறும் |

| | |
|---|---|
| உற்சாகம் | சூரியன் |
| கதிரவன் | ஊக்கம் |
| பொதி | கடுஞ்சொல் |
| வன்சொல் | உண்மை |
| மெய் | மூட்டை |

| | |
|---|---|
| வேளை | வளைந்து |
| பொறை | மனம் |
| போற்றுதல் | சினம் |
| குனிந்து | வாழ்த்துதல் |
| கோபம் | அடக்கம் |
| சவாரி | பொழுது |
| சிந்தை | பயணம் |

## பொருத்துக - எதிர்சொல்

| | |
|---|---|
| இளமை | பலவீனம் |
| பிறப்பு | இரவு |
| ஜனனம் | முதுமை |
| பகல் | மரணம் |
| பலம் | இறப்பு |

| | |
|---|---|
| காய் | எளிது |
| விழுந்து | குறை |
| அரிது | சிரிப்பு |
| அழுகை | கனி |
| நிறை | எழுந்து |

| | |
|---|---|
| அதிகம் | நிமிர்ந்து |
| குனிந்து | மேல் |
| ஏறு | வலது |
| இடது | குறைவு |
| கீழ் | இறங்கு |

| | |
|---|---|
| வா | செலவு |
| வடக்கு | தெளிவு |
| வரவு | தெற்கு |
| வினா | போ |
| குழப்பம் | விடை |

| | |
|---|---|
| பெரிய | நட்பு |
| வெற்றி | இல்லை |
| ஆம் | தோல்வி |
| பகை | அங்கே |
| இங்கே | சிறிய |

| | |
|---|---|
| இரவு | பிரித்து |
| இருள் | தள்ளு |
| இழு | பகல் |
| சேர்த்து | விண்ணில் |
| மண்ணில் | ஒளி |

உயர்த்தி
உள்ளே
பழைமை
நன்மைகள்
இயற்கை

செயற்கை
புதுமை
தீமைகள்
வெளியே
தாழ்த்தி

சிற்றிலக்கியம்
பகட்டு
நீதி
நிறை
முதுகலை

இளங்கலை
குறை
பேரிலக்கியம்
அநீதி
எளிமை

ஆதி
ஈரமான
உள்நாடு
தோற்றம்
உண்மை

மறைவு
அயல்நாடு
பொய்
அந்தம்
காய்ந்த

நல்வினை
நஞ்சு
சோம்பல்
இணைந்து
ஆண்மை

அமிழ்தம்
பெண்மை
பிரிந்து
சுறுசுறுப்பு
தீவினை

இனிப்பு
இன்பம்
ஏற்றம்
முடிவு
அருகில்

இறக்கம்
தொலைவில்
தொடக்கம்
துன்பம்
கசப்பு

கலைத்தல்
அமைதி
சத்ரு
சுருக்கம்
மேடு

நண்பன்
சேர்த்தல்
பள்ளம்
ஆரவாரம்
விரிவு

அறிவாளி
அனுமதி
எடு
எளிய
ஏற்றுமதி

மறு
கொடு
கடினம்
இறக்குமதி
முட்டாள்

ஏழை
ஒருமை
ஒற்றுமை
கடந்தகாலம்
கருப்பு

பன்மை
எதிர்காலம்
வெள்ளை
வேற்றுமை
செல்வன்

காலை
கிழக்கு
குளிர்
கூட்டல்
கேள்வி

வெப்பம்
மாலை
மேற்கு
பதில்
கழித்தல்

கிழமை: வரிசை படுத்துக

- ◯ செவ்வாய்
- ◯ சனி
- ◯ திங்கள்
- ◯ வியாழன்
- ◯ வெள்ளி
- ◯ ஞாயிறு
- ◯ புதன்

தமிழ் மாதங்கள்: வரிசை படுத்துக

- ◯ பங்குனி
- ◯ ஆடி
- ◯ தை
- ◯ புரட்டாசி
- ◯ ஆனி
- ◯ மார்கழி
- ◯ வைகாசி
- ◯ மாசி
- ◯ கார்த்திகை
- ◯ ஐப்பசி
- ◯ சித்திரை
- ◯ ஆவணி

**எது முன்னே? எது பின்னே? அகர வரிசைப்படுத்துக**

- எருது
- இளமை
- ஊறுகாய்
- ஐவர்
- ஒருமை
- உண்டு
- ஏடு
- ஆறு
- அன்பு
- ஓடு
- ஈட்டி

- கோலம்
- கூடை
- கொக்கு
- கைமணம்
- கண்
- கீதா
- காலை
- கேள்வி

- சேவல்
- சௌகரியம்
- சோளம்
- செவ்வந்தி
- சரிகை
- சூரியன்
- சித்தி
- சீரகம்

- நேரம்
- நுரை
- நொண்டி
- நூல்
- நாரை
- நோன்பு
- நிலம்
- நரி

- புத்தகம்
- பிண்ணாக்கு
- படை
- பேச்சு
- பூமி
- போர்வை
- பைந்தமிழ்
- பௌத்தம்
- பொத்தான்
- பீரங்கி
- பாடம்
- பெட்டி

- மூடி
- மோதிரம்
- மொட்டு
- மீன்
- முள்ளங்கி
- மின்னல்
- மேளம்
- மௌனம்
- மல்லிகை

**விடுபட்ட எழுத்துக்களை நிரப்புக**

1. வளையலின் வடிவம்

   வ __ __ ம்

2. பூங்காவில் சிறுவர்கள் விளையாடுவது

   ஊ __ ச ல்

3. வரிசை மாறாமல் நடைபோடும் சிறிய உயிரினம்

   எ __ ம் பு

4. காற்றில் பறப்பது

   ப ட் __ ம்

5. காட்டின் ராஜா

   சி __ __ ம்

தமிழ்நாடு

| | |
|---|---|
| சின்னம் | செங்காந்தள் |
| பறவை | தமிழ்த்தாய் வாழ்த்து |
| பாடல் | மரகதப்புறா |
| மலர் | திருவில்லிப்புத்தூர் கோவில் கோபுரம் |

| | |
|---|---|
| நடனம் | பனை |
| மரம் | பரதநாட்டியம் |
| விலங்கு | கபடி |
| விளையாட்டு | வரையாடு |

இந்தியா

| | |
|---|---|
| சின்னம் | மயில் |
| பறவை | புலி |
| மலர் | ஹாக்கி |
| விலங்கு | அசோகத் தூண் |
| விளையாட்டு | தாமரை |

| | |
|---|---|
| பாடல் | ஹிந்தி |
| மொழி | கங்கை |
| மரம் | மாம்பழம் |
| நதி | ஜன கண மன |
| கனி | ஆலமரம் |

பறவை, விலங்குகளின் இளமைப் பெயர்கள்

| | |
|---|---|
| கோழி | கன்று |
| நாய் | பறழ் |
| புலி | பிள்ளை |
| அணில் | குட்டி |
| யானை | குஞ்சு |

| | |
|---|---|
| கிளி | கன்று |
| சிங்கம் | பிள்ளை |
| கீரிப்பிள்ளை | குருளை |
| பசு | குஞ்சு |

பொருத்துக-வாழிடம்

| | |
|---|---|
| கரையான் | தொழுவம் |
| மாடு | பட்டி |
| ஆடு | பண்ணை |
| கோழி | வலை |
| சிலந்தி | புற்று |

| | |
|---|---|
| குதிரை | கூடு |
| குருவி | கூடம் |
| யானை | தேன் கூடு |
| முயல் | லாயம் |
| தேனி | பொந்து |

| | |
|---|---|
| மீன் | குகை |
| சிங்கம் | புற்று |
| குரங்கு | நீர் |
| எறும்பு | கொட்டில் |
| பன்றி | மரம் |

பொருத்துக

| | |
|---|---|
| மயில் | ஊர் |
| நாய் | பறவை |
| மல்லிகை | கிழமை |
| தை | விலங்கு |
| திங்கள் | மலர் |
| சென்னை | மாதம் |

| | |
|---|---|
| சரிகை | சட்டை |
| கருப்பு | வேட்டி |
| வெள்ளை | பொம்மை |
| சோளக்கொல்லை | மழை |
| கனத்த | கோட்டு |

**Fill in the blanks using the words given at the bottom.**

1. ஆடை நெய்பவர் = ________
2. பானைகள் செய்பவர் = ________
3. யானையைப் பழக்குபவர் = ________
4. மரவேலை செய்பவர் = ________

5. பொருள்களை விற்பவர் = ________
6. கப்பலைச் செலுத்துபவர் = ________

நெசவாளர் மாலுமி குயவர்
வணிகர் பாகன் தச்சர்

1. உழவுத் தொழில் செய்பவர் = ____________
2. வான் ஊர்தி ஓட்டுபவர் = ____________
3. சிலை வடிப்பவர் = ____________
4. தூய்மைப்பணி செய்பவர் = ____________
5. ஊர்திகளை ஓட்டுபவர் = ____________

துப்புரவாளர் ஓட்டுநர் சிற்பி
விமானி உழவர்

1. பொன்வேலை செய்பவர் = ____________
2. மீன் பிடிப்பவர் = ____________
3. வேட்டையாடுபவர் = ____________
4. நாடகங்களில் நடிப்பவர் = ____________
5. கதை, கட்டுரை எழுதுபவர் = ____________

நடிகர் பொற்கொல்லர்
எழுத்தாளர் மீனவர் வேடர்

1. வழக்குகளை எடுத்துரைப்பவர் = ____________
2. நீதி வழங்குபவர் = ____________
3. கடிதங்களை சேர்ப்பவர் = ____________
4. மருத்துவம் பார்ப்பவர் = ____________
5. பாடல்களை பாடுபவர் = ____________

வழக்குரைஞர் மருத்துவர்
பாடகர் நீதிபதி அஞ்சலகர்

**Fill in the blanks using the words given at the bottom.**

1. ஆந்தை = ____________
2. காகம் = ____________
3. சேவல் = ____________
4. குருவி = ____________
5. வாத்து = ____________
6. கோழி = ____________

கீச்சிடும் கூவும் கொக்கரிக்கும்
அலறும் கத்தும் கரையும்

1. புறா = ________
2. மயில் = ________
3. கிளி = ________
4. குயில் = ________
5. வானம்பாடி = ________

அகவும் குனுகும் பாடும்
கூவும் பேசும்

# இலக்கணம்

## எழுத்துக்கள்

தமிழ் எழுத்துக்களை உயிர் எழுத்துக்கள், மெய் எழுத்துக்கள் என இரண்டு வகையாக பிரிக்கலாம்.

உயிரும், மெய்யும் சேர்ந்து தோன்றுவது உயிர்மெய் எழுத்தாகும். ('க்' என்ற மெய் எழுத்தோடு 'அ' என்ற உயிர் எழுத்து சேர்ந்தால் 'க' என்ற உயிர்மெய் எழுத்து தோன்றுகிறது.) இவ்வாறே பிற எழுத்துக்களும் தோன்றுகிறது.

தமிழ் மொழியில் மொத்தம் 247 எழுத்துக்கள் உள்ளன. அவை

உயிர் எழுத்துக்கள்-12 (அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ)

மெய் எழுத்துக்கள்-18 (க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்)

உயிர்மெய் எழுத்துக்கள்-216 ('க' முதல் 'ன' வரை உள்ள 216 எழுத்துக்கள் உயிர்மெய் எழுத்துக்கள் எனப்படும்.)

ஆய்த எழுத்து -1 (ஃ)

சமஸ்கிருத எழுத்துக்களாகிய "ஜ , ஹ , ஷ , ஸ" போன்ற எழுத்துக்கள் தமிழ் மொழியில் சில இடங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

உயிர் எழுத்துக்களை குறில், நெடில் என இரு வகைப்படுத்தலாம்.

குறில்: அ, இ, உ, எ, ஒ (எ.கா: குடை, வினை)

நெடில்: ஆ, ஈ, ஏ, ஐ, ஊ, ஓ, ஔ (எ.கா: கூடை, வீணை)

மெய் எழுத்துக்கள் 3 வகைப்படும்.

வல்லினம்- க, ச, ட, த, ப, ற

மெல்லினம்- ங, ஞ, ண, ந, ம, ன

இடையினம்- ய, ர, ல, வ, ழ, ள

## குறில், நெடில் வகைப்படுத்துக

இ, ஐ, எ, ஓ, ஊ, ஔ, அ, உ, ஈ, ஏ, ஆ, ஒ

| குறில் | நெடில் |
|---|---|
| | |

க, கி, கோ, கௌ, கீ, கூ, கை, கா, கொ, கு, கே, கெ

குறில் | நெடில்

மு, மொ, மெ, மோ, மி, மூ, மே, மை, மா, ம, மௌ, மீ

குறில் | நெடில்

யூ, யை, யௌ, ய, யெ, யி, யா, யே, யொ, யு, யோ, யீ

குறில் | நெடில்

து, தூ, தை, தௌ, தோ, தே, தி, த, தொ, தெ, தா, தீ

குறில் | நெடில்

**குறில், நெடில் வகைப்படுத்துக**

காடை, தடி, குடை, சட்டை, கூடை, தாடி, கடை, மாலை, மலை, சாட்டை

குறில் | நெடில்

கால், பால், கல், படம், வானம், பல், நாகம், பாடம், வனம், நகம்

குறில் | நெடில்

பாடு, கொடி, தோடு, வீடு, படு, கொடு, தொடு, விடு, கோடு, கோடி

குறில் | நெடில்

பலம், கரம், தளம், மூடி, பாலம், வனம், காரம், வானம், முடி, தாளம்

குறில் | நெடில்

மனம், காலம், வினை, வாரம், மூட்டை, கலம், வரம், மானம், முட்டை, வீணை

குறில் | நெடில்

பனை, கூண்டு, சாதம், சதம், மாதம், நாரை, நரை, பானை, மதம், குண்டு

குறில் | நெடில்

நிலம், மலை, நீலம், மாலை, பாட்டு, காம்பு, காலை, கம்பு, கலை, பட்டு

குறில் | நெடில்

ஆலை, நிதி, மேன்மை, பேட்டி, நீதி, மிதி, அலை, பெட்டி, மென்மை, மீதி

குறில் | நெடில்

புதிய சொற்களை உருவாக்குக

| | |
|---|---|
| நீதி | விளங்கு |
| தமிழ் | நூல் |
| எழுது | மொழி |
| கண் | கோல் |
| விண் | மணி |
| கை | வெளி |

| | |
|---|---|
| முத்து | குதிரை |
| பனி | வீடு |
| விண் | மலை |
| வரி | பாதை |
| நடை | மாலை |
| மாடி | மீன் |

| | |
|---|---|
| தலை | நாடு |
| தமிழ் | மாடி |
| அடுக்கு | முறை |
| மூக்கு | மெத்தை |
| பஞ்சு | கண்ணாடி |

காலம்

ஒரு வினை அல்லது செயல் நிகழும் நேரமே காலம் ஆகும். காலம் 3 வகைப்படும்.

அவை நிகழ்காலம், இறந்த காலம் மற்றும் எதிர்காலம்.

செயல் நடந்து முடிந்த நேரம்/காலம் இறந்த காலம்.

(எ.கா: வந்தான், சென்றான்)

செயல் நடக்கின்ற நேரம்/காலம் நிகழ் காலம்.

(எ.கா: வருகின்றான், செய்கின்றான்)

செயல் நடக்க போகும் நேரம்/காலம் எதிர் காலம்.

(எ.கா: வருவான், செல்வான்)

பின்வரும் வாக்கியம் எந்த காலத்தை குறிக்கும்.

1. எங்கள் பள்ளியில் ஆண்டு விழா நடக்க இருக்கிறது.
2. அத்தை கோயிலுக்கு சென்றார்.
3. நேற்று நான் நடனம் ஆடினேன்.
4. நான் நாளை மைதானத்துக்கு வருவேன்.
5. கீதா வீட்டுப்பாடத்தை முடித்துவிட்டாள்.
6. நான் தோட்டத்தில் வேலை செய்து கொண்டு இருக்கிறேன்.

7. நேற்று கனமழை பெய்தது.
8. வேலன் ஒரு புத்தகத்தை தேடிக்கொண்டிருக்கிறான்.
9. நாம் இந்தியாவில் வாழ்கிறோம்.
10. சூரியன் உதிக்கும் திசை கிழக்கு.
11. நாங்கள் படம் வரைவோம்.
12. நேற்று என் தோழியை சந்தித்தேன்.
13. அம்மா கடைக்கு சென்றிருக்கிறார்.
14. நான் உணவு உண்பேன்.
15. சீதா போட்டியில் வெற்றி பெறுவாள்.

---

1. நாங்கள் நேற்று பள்ளிக்குச் சென்றோம்.
2. மாலா சந்தைக்குச் சென்றாள்.
3. மழை நேரத்தில் இடி இடிக்கும் சத்தம் கேட்டது.
4. நான் இறைவனை தினமும் வணங்குகிறேன்.
5. நான் கவிதை எழுதுகிறேன்.
6. கண்மணி அழகாக பூ தொடுப்பாள்.
7. மாலா சந்தைக்குச் செல்கிறாள்.
8. எனது அப்பா வீட்டிற்கு வந்து விட்டார்.
9. மாமா அடுத்த வாரம் வருகிறார்.
10. மயில்கள் நடனம் ஆடும்.
11. சிவா பாடல் பாடுகிறான்.
12. பொங்கல் விடுமுறையில் ஊருக்குச் செல்வோம்.
13. சுபா ஆண்டு விழாவில் பாட்டு பாடுவாள்.
14. ஆடுகள் புல் மேய்கின்றன.
15. லதா பொம்மை செய்தாள்.

---

1. மாலா சந்தைக்குச் செல்வாள்.
2. நாங்கள் காய்கறி சந்தைக்கு சென்றோம்.
3. பள்ளியில் பருவத்தேர்வு முடிந்து விட்டது.
4. நாங்கள் பள்ளிக்குச் செல்கிறோம்.
5. நாங்கள் காய்கறி சந்தைக்கு செல்கிறோம்.
6. தம்பி போட்டியில் வெற்றி பெற்றான்.
7. குமார் கதை புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறான்.
8. நாங்கள் காய்கறி சந்தைக்கு செல்வோம்.
9. ரவி சிறப்பாகப் பேசி முடித்தான்.
10. அன்னையர் தினம் கொண்டாடுகிறோம்.
11. பள்ளி விடுமுறையில் வருகிறோம்.
12. லதா நாளை பொம்மை செய்வாள்.
13. நேற்று நாங்கள் திருமண விழாவிற்குச் சென்றோம்.
14. லதா பொம்மை செய்கிறாள்.
15. நாங்கள் அடுத்த மாதம் பள்ளிக்குச் செல்வோம்.

## சொல்

பல எழுத்துக்கள் இணைந்து ஒரு பொருளைத் தருவது சொல் ஆகும். சில இடங்களில் ஓர் எழுத்தாகவும் வரும், ஆனால் பொருள் தர வேண்டும். அதற்கே சொல் என்று பெயர்.

தமிழ் மொழியில் நான்கு வகை சொற்கள் உண்டு. அவை

பெயர்ச்சொல்- ஒரு பொருளின் பெயரை உணர்த்தும் சொல் பெயர்ச்சொல். ஒருவரின் பொருள், இடம், காலம், தொழில் போன்றவற்றை குறிப்பது பெயர்ச்சொல்.

எ.கா: செல்வம், கண்மணி, இந்தியா, சித்திரை

வினைச்சொல் - ஒருவர் செய்யும் செயலைக் குறித்து பேசுவது வினைச்சொல் ஆகும்.

எ.கா: "ரவி ஓடுகிறான்" (ஓடுகிறான்- வினைச்சொல்)

உரிச்சொல் - ஒருவர் செய்யும் செயலை எப்படி செய்கிறார், எவ்வாறு செய்கிறார் என்பது குறித்து விளக்குவது உரிச்சொல் ஆகும்.

எ.கா: "ரவி வேகமாக ஓடுகிறான்" (வேகமாக- உரிச்சொல்).

இடைச்சொல் - இடைச்சொல் என்பது தனித்து நில்லாமல் பெயரையாவது, வினையையாவது சார்ந்து வருவது.

எ.கா: தேவி நடந்தே வீட்டுக்கு வந்தாள். (தே, "நடந்தே" என்பது வினை உரிச்சொல்.)

## பெயர்ச்சொல்-வினைச்சொல் வகைப்படுத்துக

ஓடுகிறது, வரைகிறாள், பசு, அழைக்கிறாள், மனிதன், அம்மா, அதிர்ந்தது, சென்னை, புத்தகம், வருகிறாள்

| பெயர்ச்சொல் | வினைச்சொல் |
|---|---|
| | |

---

பாடுகிறான், தமிழகம், மணி, வந்தது, நாள், ஆண்டு, ஆடுகிறான், கூவுகிறது, அழைக்கிறார்கள், மாதம்

| பெயர்ச்சொல் | வினைச்சொல் |
|---|---|
| | |

காற்று, சமைக்கிறாள், நீர், வீசுகிறது, பெய்கிறது, எரிகிறது, அழுகிறது, நிலம், பாப்பா, மழை

| பெயர்ச்சொல் | வினைச்சொல் |
| --- | --- |
| | |

வினைச்சொல்லை தேர்வு செய்க

1. நேற்று சுதா பள்ளிக்கு வரவில்லை.
2. சிவா சிறுத்தை போல் வேகமாக ஓடுவான்.
3. பூங்காவில் மயில் ஒன்று தோகை விரித்து ஆடியது.
4. 1969 ஆம் ஆண்டு, மனிதன் நிலாவில் கால் பதித்தான்.
5. காலை நேரத்தில் கீதா ஓவியம் வரைவாள்.

1. கொத்தனார் வீடு கட்டினார்.
2. அனு கட்டுரை எழுதினாள்.
3. அம்மா உணவு சமைக்கிறாள்.
4. மாமா மரக்கன்றை நட்டார்.
5. ஆனந்தி படம் வரைகிறாள்.

பால்

ஆண்பால்: ஆண்களைக் குறிப்பது ஆண்பால் எனப்படும். (எ.கா) ராமன் , மோகன்

பெண்பால்: பெண்களைக் குறிப்பது பெண்பால் எனப்படும். (எ.கா) கவிதா, லலிதா

பலர்பால்: ஆண், பெண்களில் பலரைக் குறிப்பது பலர்பால் எனப்படும். (எ.கா) மக்கள், ஆண்கள், பெண்கள்

ஒன்றன் பால்: அஃறிணைப் பொருள்களில் ஏதேனும் ஒன்றைக் குறிப்பது ஒன்றன் பால் எனப்படும். (எ.கா) கல், மரம்

பலவின் பால்: அஃறிணைப் பொருள்களில் பலவற்றைக் குறிப்பது பலவின்பால் எனப்படும். (எ.கா) அவை, வீடுகள், மாடுகள்

ஆண்பால்-பெண்பால் வகைப்படுத்துக

சிறுவன், அண்ணண், நடிகை, அப்பா, சிறுமி, நடிகன், சகோதரி, சகோதரன், அக்கா, அம்மா

| ஆண்பால் | பெண்பால் |
| --- | --- |
| | |

பாட்டி, மகன், தாத்தா, தம்பி, அரசி, மாமா, அரசன், அத்தை, மகள், தங்கை

| ஆண்பால் | பெண்பால் |
| --- | --- |
| | |

தோழன், மருமகன், பேத்தி, மாணவி, பேரன், தோழி, ஆசிரியர், ஆசிரியை, மருமகள், மாணவன்

| ஆண்பால் | பெண்பால் |
| --- | --- |
| | |

உயர்திணை-அஃறிணை

உலகத்தில் வாழும் மக்களையும் தேவர்களையும் குறிப்பது உயர்திணை என்று அழைக்கப்படுகிறது.

எ.கா: மக்கள் (ராமன், தேவி, தொழிலாளர்), தேவர்கள் (நாரதர் , இந்திரன்)

மக்கள், தேவர்கள் ஆகியோர் தவிர மற்ற உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்கள் அனைத்தும் அஃறிணை எனப்படும்.

எ.கா: மண், விளக்கு, நாய், செடி

உயர்திணை-அஃறிணை வகைப்படுத்துக

சூரியன், செல்வன், கரிகாலன், படகு, உழவன், ஆசிரியர், அம்மா, வயல், புத்தகம், அணில்

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| | |

பழம், மருத்துவர், வியாபாரி, மரம், பள்ளி, மக்கள், பசு, வீடு, பாட்டி, மாணவன்

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| | |

இலை, பார்வதி, செடி, சிறுவன், நகை, குழந்தை, மேசை, அமைச்சர், கப்பல், தோழி

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| | |

ஒருமை-பன்மை

பொருட்களின் எண்ணிக்கையை குறிப்பதே எண் ஆகும். ஒன்றை உணர்த்துவது ஒருமை என்றும், ஒன்றுக்கு மேற்பட்ட அல்லது பலவற்றை குறிப்பது பன்மை என்றும் கூறப்படுகிறது.

எ.கா: சிறுமி, சிறுமிகள்

ஒருமை - பன்மை

1. நண்பன் ( நண்பர்கள், நண்பன்கள்)
2. பெண் ( பெண்கல், பெண்கள்)
3. சிறுமி ( சிறுமிகள், சிறுவிகள்)
4. பகைவன் ( பகைவர்கள், பகைவன்கள்)
5. அமைச்சர் ( அமைச்சற்கள், அமைச்சர்கள்)
6. வேந்தன் ( வேந்தன்கல், வேந்தர்கள்)
7. பூ ( பூக்கள், பூகள்)
8. மீன் ( மீன்கல், மீன்கள்)
9. நாள் ( நாள்கள், நாட்கள்)
10. ஆறு ( ஆறுகல், ஆறுகள்)

1. செடி ( செடிகல், செடிகள்)
2. நாய் ( நாய்கள், நாய்கல்)
3. நகரம் ( நகறங்கல், நகரங்கள்)
4. சொல் ( சொல்கள், சொற்கள்)
5. விழா ( விழாக்கள், விழாக்கல்)
6. மாடு ( மாடுகள், மாடுக்கள்)
7. மரம் ( மரங்கள், மரம்கள்)
8. பழம் ( பழங்கள், பழங்கல்)
9. சாலை ( சாலைகல், சாலைகள்)
10. கனி ( கனிகள், கனிகல்)

1. தோட்டம் ( தோட்டங்கள், தோட்டக்கள்)
2. குதிரை ( குதிரைகள், குதிரைகல்)
3. மலர் ( மலற்கள், மலர்கள்)
4. காய் ( காய்க்கள், காய்கள்)
5. கல் ( கல்கள், கற்கள்)
6. பல் ( பற்கள், பல்கள்)
7. கண் ( கண்கல், கண்கள்)
8. மேகம் ( மேகங்கல், மேகங்கள்)
9. அவர் ( அவர்கல், அவர்கள்)
10. பிழை ( பிழைகள், பிழைகல்)

1. பிள்ளை ( பிள்ளைகல், பிள்ளைகள்)
2. கடை ( கடைகல், கடைகள்)
3. குழந்தை ( குழந்தைகல், குழந்தைகள்)
4. கவிதை ( கவிதைகள், கவிதைகல்)
5. குளம் ( குலங்கல், குளங்கள்)
6. நிறம் ( நிறங்கள், நிறங்கல்)
7. விடை ( விடைகல், விடைகள்)
8. விளக்கு ( விளக்குகள், விளக்குகல்)
9. வண்ணம் ( வண்ணங்கல், வண்ணங்கள்)
10. கிளை ( கிளைகல், கிளைகள்)

1. வீரன் ( வீரர்கல், வீரர்கள்)
2. கோடு ( கோடுகள், கோடுகல்)

3. குரங்கு ( குரங்குகள், குரங்குகல்)
4. நிலம் ( நிலங்கல், நிலங்கள்)
5. கரை ( கரைகள், கரைகல்)
6. கூட்டம் ( கூட்டங்கள், கூட்டம்கல்)
7. நட்சத்திரம் ( நட்சத்திரங்கல், நட்சத்திரங்கள்)
8. பள்ளி ( பள்ளிகல், பள்ளிகள்)
9. பாத்திரம் ( பாத்திரங்கல், பாத்திரங்கள்)
10. கருவி ( கறுவிகல், கருவிகள்)

---

1. பூங்கா ( பூங்காக்கல், பூங்காக்கள்)
2. கோழி ( கோழிகள், கோழிகல்)
3. கலை ( கலைகள், கலைகல்)
4. திசை ( திசைகள், திசைகல்)
5. வார்த்தை ( வார்த்தைகல், வார்த்தைகள்)
6. புத்தகம் ( புத்தகங்கல், புத்தகங்கள்)
7. எழுத்து ( எழுத்துக்கள், எழுத்துகள்)
8. எண்ணம் ( எண்ணங்கல், எண்ணங்கள்)
9. எண் ( எண்கல், எண்கள்)
10. பாடம் ( பாடங்கள், பாடங்கல்)

---

1. மொழி ( மொழிகள், மொழிகல்)
2. சொல் ( சொற்கல், சொற்கள்)
3. ரோஜா ( ரோஜாக்கள், ரோஜாக்கல்)
4. ஆசிரியர் ( ஆசிரியர்கள், ஆசிரியர்கல்)
5. உயிரினம் ( உயிரினங்கள், உயிரினங்கல்)
6. கிழமை ( கிழமைகல், கிழமைகள்)
7. ஆண்டு ( ஆண்டுகல், ஆண்டுகள்)
8. பேனா ( பேனாகள், பேனாக்கள்)
9. சங்கு ( சங்குகல், சங்குகள்)
10. வருடம் ( வருடங்கள், வருடங்கல்)

<u>சேர்த்து எழுதுக</u>

1. பெரிய+ஒலி

   __ __ லி

2. நுழைவு+சீட்டு

   நு ழை __ __ __ ட் டு

3. தெரு+எங்கும்

   தெ __ __ __ கு ம்

4. ஒலி+எழுப்பி

   ஒ __ __ ழு ப் பி

5. இன்பம்+தமிழ்

   இ ன் __ __ த மி ழ்

6. கருமை+குயில்

   க ரு __ கு யி ல்

7. படர்ந்து+இருக்கும்

   ப ட ர் __ __ ரு க் கு ம்

8. வண்ணம்+மலர்

   வ ண் __ __ ல ர்

9. நெல்+கதிர்

   நெ __ க தி ர்

10. தேடி+சென்றன

    தே டி __ __ ன் ற ன

---

1. வேறு+எங்கும்

   வே __ __ __ ம்

2. வான்+உயர்ந்த

   வா __ __ __ __ த

3. நீர்+ஓசை

   நீ __ சை

4. மலையில்+இருந்து

   ம __ __ __ __ __ து

5. மானை+கண்டு

   மா __ __ __ __ டு

6. நாடு+பற்று

   நா __ __ __ __ __ று

7. விடுதலை+போராட்டம்

   வி __ __ __ __ __ __ __ ட ம்

8. செம்மை+மொழி

   செ __ __ ழி

9. ஆறு+ஆயிரம்

   ஆ __ __ __ ம்

10. வடக்கு+மொழி

    வ __ __ ழி

---

1. தொழில்+கல்வி

   தொ __ __ __ __ வி

2. இயற்கை+அன்னை

   இ ய __ __ __ __ னை

3. நாடகம்+கல்வி

   நா __ __ __ __ __ வி

4. புதுமை+உயிர்

   பு __ __ __ ர்

5. நாடு+எல்லாம்

நா __ __ __ ம்

6. சரிந்தது+அங்கே

ச ரி __ __ __ ங் கே

7. வளர்ந்து+ஓங்கும்

வ ள __ __ __ __ கு
ம்

8. என்+உயிர்

எ __ __ யி ர்

9. அறிவு+ஆயுதம்

அ __ __ __ த ம்

10. அமர்ந்து+ இருந்த

அ __ __ __ __ ரு ந்
த

1. கண்+இமைக்கும்

க ண் __ __ __ __ ம்

2. சூறை+காற்று

சூ __ __ __ ற் று

3. மரம்+பொந்து

ம __ __ __ ந் து

4. கருமை+கடல்

க __ __ __ __ ல்

5. பழைமை+மொழி

ப __ __ ழி

6. நன்மை+வழி

ந __ __ ழி

7. செம்மை+தமிழ்

செ __ __ __ ழ்

8. கவி+அரங்கம்

க __ __ __ __ க ம்

9. நன்மை+தமிழ்

ந __ __ __ ழ்

10. என்+உயிர்

எ __ __ __ ர்

1. தெற்கு+மேற்கு

தெ __ __ __ கு

2. தொடக்கம்+விழா

தொ __ __ __ வி ழா

3. மயில்+ஆட்டம்

ம யி __ __ __ ம்

4. குருவி+கூடு

கு __ __ __ கூ டு

5. பூ+பந்தல்

பூ ப் __ __ __ ல்

6. வேலை+ஆள்

வே __ __ ள்

7. சமையல்+கலை

ச __ __ __ க லை

8. அந்த+பெயர்

அ __ __ ய ர்

9. இந்த+திருடன்

இ ந் த __ __ __ __
ன்

1. எந்த+பக்கம்

எ __ __ __ __ __
க ம்

2. குட்டி+பையன்

கு __ __ __ __ ய ன்

3. தீ+பொறி

தீ __ __ றி

4. நெசவு+தொழில்

நெ __ __ __ __ __
ல்

5. விண்+உலகம்

வி __ __ __ __ ம்

6. மரம்+கிளை

ம __ __ __ ளை

7. வீதி+உலா

வீ __ __ லா

8. வழி+எங்கும்

வ __ __ __ கு ம்

9. மரம்+பெட்டி

ம ர __ __ __ டி

10. கல்+குவியல்

க __ __ __ ய ல்

1. நீர்+கோவை

நீ __ __ __ வை

2. உயிர்+தோழன்

உ __ __ __ __ ழ ன்

3. நாடு+பற்று

நா __ __ __ __ __
று

4. வரகு+அரிசி

வ __ __ __ சி

5. வாக்கு+உரிமை

வா __ __ __ மை

6. அமுது+என்று

அ __ __ __ று

7. சூரியன்+வழிபாடு

சூ ரி __ __ __ __ டு

8. வான்+ஒலி

வா __ லி

9. கால்+ஆண்டு

கா __ __ டு

10. தமிழ்+சங்கம்

த __ __ __ __ __ க ம்

---

1. மலை+கோட்டை

ம __ __ __ __ டை

2. வர+இல்லை

வ __ __ __ லை

3. எலி+பொறி

எ லி __ __ றி

4. முன்+காலம்

மு __ __ __ ம்

5. காலம்+சக்கரம்

கா __ __ __ __ __ ர ம்

6. உறுதி+உடன்

உ __ __ __ ட ன்

7. அளவு+இல்லாமல்

அ __ __ __ __ ம ல்

8. இசை+ஒலி

இ சை __ லி

9. ஓய்வு+எடுத்தார்

ஓ ய் __ __ __ __ ர்

10. மரம்+பொந்து

ம ர __ __ __ து

---

1. மணி+துளி

ம __ __ __ ளி

2. அறிவியல்+அறிஞர்

அ __ __ __ __ __ ஞ ர்

3. பத்து+இரண்டு

ப ன் __ ர ண் டு

4. அருகில்+இருந்து

அ __ __ __ __ ந் து

5. பல்+பசை

ப __ ப சை

6. நாடு+பற்று

நா __ __ __ ப ற் று

7. ஓடி+ஆடி

ஓ டி __ டி

8. விருந்து+ஓம்பல்

வி __ __ __ __ ப ல்

9. கதர்+ஆடை

க __ __ டை

10. நன்மை+வழி

ந __ __ ழி

---

1. மூன்று+கனி

மு __ __ னி

2. மா+பழம்

மா __ __ __ ம்

3. உழவு+தொழில்

உ __ __ __ __ ழி ல்

4. காலை+பொழுது

கா __ __ __ ழு து

5. வகுப்பு+அறை

வ __ __ __ றை

6. அகம்+மகிழ்ந்து

அ __ __ __ __ ந் து

7. இனிமை+ஆன

இ __ __ __ ன

8. வெற்றி+கோப்பை

வெ __ __ __ __ __ பை

9. சீர்+அகம்

சீ __ க ம்

10. நிறைவு+அடைந்தது

நி __ __ __ __ த து

<u>பிரித்து எழுதுக</u>

1. அச்செல்வம்=
2. பன்மொழி=
3. பதிவேடு=
4. விலங்கினம்=
5. வாழிடம்=
6. அரும்பணி=

7. ஓரிடம்=
8. பைங்குவளை=
9. மின்னஞ்சல்=
10. அமுதென்று=

1. நாட்குறிப்பு=
2. அந்நாடு=
3. மூவாயிரம்=
4. பொற்காசு=
5. கற்கண்டு=
6. அரசாணை=
7. பேச்சுக்கலை=
8. மணமென்று=
9. பேரிடர்=
10. பெரும்பகுதி=

1. உடலுழைப்பு=
2. அறிவாற்றல்=
3. யாரவர்=
4. இப்பிணி=
5. அறனல்ல=
6. படிப்பறிவு=
7. நீரமுது=
8. என்றுரைத்தல்=
9. சண்டையில்லாமல்=
10. முடிவெடுத்தன=

1. உணவகம்=
2. இடமின்றி=
3. வந்திருந்த=
4. ஏனென்றால்=
5. கண்ணுறங்கு=
6. ஒன்றையொன்று=
7. ஆளுக்கொரு=
8. பணியாற்றும்=
9. செடியில்லாத=
10. மலர்த்தொட்டி=

1. மக்களுண்டு=
2. தமிழுண்டு=
3. புகைப்படம்=
4. மலைத்தொடர்=
5. மலைக்குகை=
6. கனியுண்டு=

7. கையொலி=
8. விளைந்திருந்தன=
9. நெடுநாள்=
10. காலைச்சிற்றுண்டி=

1. எடுத்துவந்தார்=
2. காட்டெருமை=
3. பெருஞ்சண்டை=
4. கட்டவிழ்த்து=
5. கொள்வதேனோ=
6. நோக்கிப்போகவா=
7. கொள்ளலாயினன்=
8. தொலைக்காட்சி=
9. அறுவடைக்காலம்=
10. நச்சுப்பொருள்=

1. பழச்சாறு=
2. படக்கதை=
3. அறவழி=
4. இரத்தமின்றி=
5. கதராடை=
6. தொண்டர்படை=
7. பழமையான=
8. செம்மொழி=
9. கடுஞ்சொல்=
10. நூலாடை=

1. தானென்று=
2. தன்னாடு=
3. பல்கலை=
4. பன்மொழி=
5. பதிவேடு=
6. கடுங்காவல்=
7. தளர்ந்திருந்த=
8. இன்னுயிர்=
9. நல்லொழுக்கம்=
10. தோட்டக்கலை=

1. காலமறிந்து=
2. பற்பல=
3. முத்தமிழ்=
4. நீராவி=
5. புவியீர்ப்பு=
6. தனக்கென்று=

7. வீரக்கலை=
8. சிலம்பாட்டம்=
9. தீயொழுக்கம்=
10. மாடித்தோட்டம்=

1. என்றென்றும்=
2. ஐம்பால்=
3. ஒலியெழுப்பி=
4. பதவியேற்று=
5. ஆற்றுநீர்=
6. வாழைப்பழம்=
7. மாட்டுவண்டி=
8. மரக்கிளை=
9. அன்புள்ளம்=
10. பட்டாடை=

1. நீலக்கடல்=
2. மரப்பலகை=
3. பாடநூல்=
4. அச்சுக்கலை=
5. தமிழெழுத்து=
6. கண்ணெழுத்து=
7. அழகுணர்ச்சி=
8. ஓலைச்சுவடி=
9. பனித்துளி=
10. நல்லொழுக்கம்=

பொருத்துக

| | |
|---|---|
| மாணவன் | தோழி |
| சிறுவன் | செல்வி |
| செல்வன் | சிறுமி |
| தோழன் | கிழவி |
| கிழவன் | மாணவி |

| | |
|---|---|
| தந்தை | மாமி |
| தம்பி | அண்ணி |
| தாத்தா | தங்கை |
| அண்ணன் | தாய் |
| மாமா | பாட்டி |

| | |
|---|---|
| நாயகன் | பாடகி |
| தலைவன் | நடிகை |
| நடிகன் | தலைவி |
| பாடகர் | அழகி |
| அழகன் | நாயகி |

| | |
|---|---|
| அப்பா | ராணி |
| ராஜா | சகோதரி |
| ஆசிரியர் | குறத்தி |
| சகோதரன் | அம்மா |
| குறவன் | ஆசிரியை |

| | |
|---|---|
| மகன் | மனைவி |
| மருமகன் | மகள் |
| மணமகன் | மருமகள் |
| சேவகன் | மணமகள் |
| கணவன் | சேவகி |

## எழுத்துப்பிழை

சரியான வார்த்தையை தேர்வு செய்க

1. பறவை, பரவை
2. உலகம், உளகம்
3. எலுத்து, எழுத்து
4. சோளம், சோலம்
5. அறசன், அரசன்
6. அரிவு, அறிவு
7. வணிகர், வனிகர்
8. வெல்ளை, வெள்ளை
9. வரிசை, வறிசை
10. விசரி, விசிறி

1. பெரிய, பெறிய
2. சிருமி, சிறுமி
3. மீன், மீண்
4. சாலை, சாளை
5. குதிறை, குதிரை
6. கன், கண்
7. பென், பெண்
8. அண்னன், அண்ணன்
9. அலகன், அழகன்

10. கவலை, கவளை

1. சேர்த்து, சேற்த்து
2. இயற்கை, இயற்க்கை
3. இலமை, இளமை
4. வென்னீர், வெந்நீர்
5. உன்மை, உண்மை
6. இணிப்பு, இனிப்பு
7. சேவல், சேவள்
8. எறும்பு, எரும்பு
9. நிலம், நிளம்
10. உரல், உறல்

1. மளை, மழை
2. கழம், களம்
3. பழம், பளம்
4. மரம், மறம்
5. அருகில், அறுகில்
6. மகிழ்ச்சி, மகிள்ச்சி
7. தோலன், தோழன்
8. மநம், மனம்
9. குரிப்பு, குறிப்பு
10. முயற்சி, முயர்சி

1. நளம், நலம்
2. தளை, தலை
3. தோள்வி, தோல்வி
4. ஜண்ணல், ஜன்னல்
5. பொருல், பொருள்
6. கறுவி, கருவி
7. சோரு, சோறு
8. கோழம், கோலம்
9. வெள்ளி, வெல்லி
10. கணிப்பொறி, கணிப்பொரி

1. தொளைக்காட்சி, தொலைக்காட்சி
2. உள்ளம், உல்லம்
3. வானொலி, வானொளி
4. மொலி, மொழி
5. பறுப்பு, பருப்பு
6. கிலை, கிளை
7. வன்னம், வண்ணம்
8. தூரம், தூறம்
9. கர்பனை, கற்பனை

10. துனிச்சல், துணிச்சல்
11. வீறம், வீரம்

சரியான விடையை தேர்ந்தெடு

1. கடலில் ____ (அலை, அளை) வேகமாக வீசுகிறது.
2. _______ (குழந்தை, குலந்தை) இருக்கும் இடம் கலகலப்பாக இருக்கும்.
3. அப்பா என்னை ____ (அழை, அலை)த்தார்.
4. ராதா மிகவும் ____ (அழகு, அலகு) வாய்ந்தவள்.
5. நான் ____ (அவல், அவழ்) சாப்பிட்டேன்.
6. இந்த ____ (வழி, வலி) கரடுமுரடாக உள்ளது.
7. காற்றை ____ (வளி, வழி) என்றும் கூறலாம்.

1. ____ (அவள், அவல்) என் தோழி.
2. மாமா எனக்கு ஒரு பரிசு ____ (அளி, அலி)த்தார்.
3. பாண்டியர்கள் பகைவரை ____ (அழி, அளி)த்தனர்.
4. தச்சருக்கு தேவைப்படும் கருவி ____ (உளி, உலி).
5. குரங்கின் ____ (வால், வாழ்) நீளமாக இருந்தது.
6. வீரர்கள் கையில் கூர்மையான ____ (வாள், வால்) வைத்திருந்தனர்.
7. நீண்ட தூரம் நடந்ததால் காலில் ____ (வலி, வளி) ஏற்பட்டது.

1. உயிர் கொடுப்பான் _____ (தோழன், தோலன்).
2. கொடுத்து ________ (மகிழ்வது, மகிள்வது) இன்பம்.
3. கிளியின் ____ (அலகு, அளகு) சிவப்பாக இருக்கும்.
4. அம்மா வாசலில் _____ (கோலம், கோளம்) போட்டாள்.
5. மரம் வளர்ப்போம்,____ (மழை, மலை) பெறுவோம்.
6. உயர்ந்து நிற்பது ____ (மலை, மளை).
7. பாதையை குறிப்பது ____ (வழி, வலி).

1. _____ (அல்லி, அள்ளி) மலர் மாலையில் மலர்கிறது.
2. உடல் காயத்தினால் ஏற்படுவது ____ (வலி, வளி).
3. அம்மா குழந்தையை கொஞ்சி _____ (குலவி, குளவி)னர்.
4. தாத்தாவை _____ (குளவி, குலவி) கொட்டியது.
5. ராமன் கடையில் ____ (பழம், பலம்) வாங்கினான்.
6. கனத்த மழை பெய்ததால் _______ (வெள்ளம், வெல்லம்) ஏற்பட்டது.
7. வீரனின் கையில் நீண்ட ____ (வாள், வால்) இருந்தது.

1. அண்ணன் தொழிற்சாலையில் ____ (வேலை, வேளை) செய்கிறார்.

2. ஆடுகள் இலை ____ (தழை, தலை) களைத் தின்றன.
3. சிறுவர்கள் ஆர்வத்துடன் ____ (கோலி, கோழி) விளையாடினர்.
4. தாத்தா தினமும் அதி ____ (காலை, காளை)யில் நடைப்பயிற்சி செய்வார்.
5. அன்பரசன் சிற்பக்____ (கலை, களை)யில் சிறந்தவன்.
6. வெள்ளை நிறத்____ (தாள், தால்) ஒன்றில் கபிலன் படம் வரைந்தான்.
7. ____ (ஆழி, ஆளி)ப்பேரலை கடலோர மாவட்டங்களில் அதிக பாதிப்பை ஏற்படுத்தியது.

சரியான விடையை தேர்ந்தெடு

1. வீட்டுக்கு ஒரு ____ (மரம், மறம்) வளர்ப்போம்.
2. ஒன்றில் பாதி ____ (அரை, அறை).
3. என் வீட்டில் எனக்கென்று ஓர் ____ (அறை, அரை)உள்ளது.
4. ஆடு புற்களை ____ (இரை, இறை)யாக எடுத்துக்கொள்ளும்.
5. எந்த செயல் தொடங்கும்போதும் ____ (இறை, இரை) வனை வேண்டுகிறேன்.

---

1. நிலவு வரும் நேரம் ____ (இரவு, இறவு).
2. ஆற்றின் ஓரங்களை ____ (கரை, கறை) என்கிறோம்.
3. பள்ளி சீருடையில் ____ (கறை, கரை) படிந்து விட்டது.
4. ஆண்டு விழாவில் நான் நன்றி ____ (உரை, உறை) ஆற்றினேன்.
5. அம்மா தலையணை ____ (உறை, உரை) தைக்கிறாள்.

சரியான விடையை தேர்ந்தெடு

1. நேர்மை எப்போதும் _____ (நன்மை, நண்மை) தரும்.
2. ஐம்புலன்களில் ஒன்று ____ (கண், கன்).
3. பூக்களில் இருப்பது ____ (தேன், தேண்).
4. மார்கழி மாதத்தில் ____ (பனி, பணி) பெய்யும்.
5. ____ (பனை, பணை) மரத்தில் நுங்கு கிடைக்கும்.

---

1. உயரத்தில் ஏற பயன்படுவது ____ (ஏணி, ஏனி).
2. ____ (பணம், பனம்) பத்தும் செய்யும்.
3. சுவரில் அடிப்பது ____ (ஆணி, ஆனி).
4. தமிழ் மாதங்களில் ஒன்று ____ (ஆனி, ஆணி).
5. வீட்டை காக்கும் விலங்கு ____ (நாய், னாய்) .

---

1. தேனை சேகரிப்பது ____ (தேனீ, தேநீ).
2. _____ (பன்றி, பண்றி) கூட்டமாக வாழும்.

3. பள்ளியில் சதந்திர தின ____________ (கொண்டாட்டம், கொன்டாட்டம்) நடந்தது.
4. திருமண _______ (மண்டபம், மன்டபம்) கோலாகலமாக இருந்தது.
5. தம்பி _____ (பந்து, பன்து) விளையாடுகிறான்.
6. ________ (வெந்தயம், வெண்தயம்) உடலுக்கு குளிர்ச்சி தரும்.

## வாக்கியம்

வார்த்தைகளை இணைத்து வாக்கியம் அமை

1. ஏழு வாரத்தின் நாட்கள்
2. திசை சூரியன் கிழக்கு உதிக்கும்
3. விலங்கு வீட்டு பூனை ஒரு
4. நன்றியுள்ள பிராணி நாய்
5. இருக்கும் பூக்கள் மென்மையாக
6. வேகமாக ஓடுவான் ராமு
7. வளர்க்கிறார் தாத்தா செடி
8. சொல்வார் பாட்டி கதை
9. நன்றாக வரைவான் கண்ணன்
10. ஒரு சுட்டிப்பெண் கீதா

---

1. படிக்கிறேன் நான் பாடம்
2. இருக்கும் உயரமாக மரம் பனை
3. ஏழு நிறங்கள் இருக்கும் வானவில்லில்
4. செய விரும்பு அறம்
5. மோர் குடித்தார் மாமா
6. ஆடுகிறான் நிலன் தாயம்

7. சுடுகிறாள் அத்தை வடை

8. ஊதுகிறாள் கலா பலூன்

9. வண்டி ஓடாது இல்லாமல் சக்கரம்

10. செல்கிறேன் நான் நூலகம்

8. அடிக்கும் கேட்கிறது மணி ஓசை

9. விடுவேன் அதிகாலையில் எழுந்து

10. விரித்து ஆடும் மயில் தோகை

11. அதிவேகமாக ஓடும் முயல்

---

1. உள்ளது இலக்கணப்பயிற்சி எளிமையாக

2. வழக்கம் நடைப்பயிற்சி செய்வது

3. இரவில் தேடும் வௌவால் உணவு

4. வீரன் பீமன் பலமுள்ள

5. பாடுவாள் மாலா இனிமையாக

6. செல்கிறோம் நாங்கள் சுற்றுலா

7. வாங்கினாள் தங்கை பரிசு

8. அடித்தார் அப்பா நீச்சல்

9. கேட்கிறாள் பாப்பா பொம்மை

10. சமையல் செய்தார் அம்மா

1. விழுந்தது பள்ளத்தில் பழுத்துப் பலாப்பழம்

2. சுவையாக இருக்கிறது மிகவும் சாப்பாடு

3. இரவில் பால் குடிப்பேன் தினமும்

4. உருண்டையாய் இருக்கும் லட்டு

5. செலுத்துவேன் உயிர்களிடத்தில் அன்பு

6. படிப்பேன் தேடிப் நூல்களை நல்ல

7. நட்டு வளர்ப்பேன் மரக்கன்றுகளை

8. செய்யமாட்டேன் ஆபத்தான செயல்களை

9. என்னுடைய புத்தகம் இது

10. சின்னம் அசோகத்தூண் தேசிய இந்தியாவின்

---

1. தரும் பசு பால்

2. குடிக்கும் பூனை பால்

3. புளிக்கும் மாங்காய்

4. கட்டலாம் கடற்கரையில் மணல்வீடு

5. நேரத்தில் ஓய்வு படிப்பேன் கதை

6. நாய் வாலை ஆட்டும்

7. வேகமாக செல்கிறது வண்டி

1. விளையாடச் சென்றேன் நான்

2. புளிக்கும் பாலும் பழக பழக

3. கேட்பேன் வானொலி நேரத்தில் ஓய்வு

4. செடியில் பூத்திருந்தன பூக்கள்

5. நன்மை தரும் நேர்மை எப்பொழுதும்

6. வளர்ந்தது மரம் செழித்து

7. மயில் பறவை தேசிய இந்தியாவின்

8. மிதிவண்டி ஓட்டினான் மோகன்

9. நடனம் ஆடினாள் மாதவி

10. புல் மேய்ந்தது மாடு

1. முளைத்து விதை வளர்ந்தது செடி

2. வட்டமாக இருக்கும் முழுநிலா

3. உற்சாகமாக இருக்கும் செய்தால் நடைப்பயிற்சி

4. எடுக்கிறாள் செல்வி ஓய்வு

5. தமிழ் பாடல்களை விரும்புகிறேன்

6. மலர் தாமரை இந்தியாவின் தேசிய

7. என்ன? உன் பெயர்

8. கவனமாக செல்வேன் சாலையில்

9. தமிழை வளர்த்தனர் பாண்டியர்கள் போற்றி

10. அயராது உழைத்தான் அன்பரசன்

1. விடுவேன் விடியற்காலையில் எழுந்து

2. உழைத்ததால் அயராது பெற்றான் வெற்றி

3. மதிப்பெண் பெறவேண்டும் அதிக தேர்வில்

4. நூல்களை வேண்டும் நல்ல கற்க

5. தமிழில் பேசுங்கள் இனிய

6. கட்டியவர் யார்? கல்லணையை

7. வேண்டும் கடைபிடிக்க சாலை விதிகளை

8. வேண்டும் இருக்க அமைதியாக வகுப்பறையில்

9. புலி விலங்கு தேசிய இந்தியாவின்

10. உணவை உண்போம் சத்தான

11. எங்களுடன் வருகிறீர்களா? ஞாயிற்றுக்கிழமை

<u>பழமொழிகள்</u>

| | |
|---|---|
| விளையும் பயிர் | உள்ளளவும் நினை |
| உப்பிட்டவரை | சிறப்பான பழக்கம் |
| ஊக்கம் | கல்லும் கரையும் |
| கரைப்பார் கரைத்தால் | முளையிலே தெரியும் |
| சேமிக்கும் பழக்கம் | ஆக்கத்திற்கு அழகு |

| | |
|---|---|
| ஏற்றம் காண | சோறு போடும் |
| சுத்தம் | அமிழ்தமும் நஞ்சு |
| அளவிற்கு மிஞ்சினால் | எறும்பு போல் உழை |
| யானைக்கும் | தன் குஞ்சு பொன்குஞ்சு |
| காக்கைக்கும் | அடி சறுக்கும் |

| | |
|---|---|
| தனி மரம் | வாயால் கெடும் |
| நுணலும் தன் | ஐம்பதிலே வளையுமா? |
| சிறு துரும்பும் | புல்லும் ஆயுதம் |
| வல்லவனுக்கு | தோப்பாகாது |
| ஐந்திலே வளையாதது | பல் குத்த உதவும் |

| | |
|---|---|
| ஆறிலுஞ் சாவு | சூரிய நமஸ்காரம் |
| கற்றது கைம்மண்ணளவு | அம்பை நோவானேன்? |
| எய்தவன் இருக்க | படைக்கு அஞ்சான் |
| கண் கெட்ட பின்னர் | நூறிலுஞ் சாவு |
| தம்பி உடையான் | கல்லாதது உலகளவு |

| | |
|---|---|
| ஏட்டுச் சுரைக்காய் | நீள் புகை எழும்புமா? |
| நெருப்பு இல்லாமல் | கறிக்கு உதவாது |
| ஆவும் தென்னையும் | அணைகோல வேண்டும் |
| கழுதைக்குத் தெரியுமா | ஐந்து வருடத்தில் பலம் தரும் |
| வெள்ளம் வரும் முன் | கற்பூர வாசனை? |

நொறுங்கத் தின்றால் | மீசைக்கும் ஆசை
பூனைக்குக் கொண்டாட்டம் | தனக்குதவி
கூழுக்கும் ஆசை | கோடி நன்மை
கூடி வாழ்ந்தால் | எலிக்குத் திண்டாட்டம்
தன் கையே | நூறு வயது

**Fill in the blanks using the words given at the bottom.**

1. ஏட்டுச் சுரைக்காய் ____________ உதவாது.
2. கூடி வாழ்ந்தால் ____________ நன்மை.
3. சிறு ____________ பல் குத்த உதவும்.
4. ஏற்றம் காண ____________ போல் உழை.
5. விளையும் ____________ முளையிலே தெரியும்.

எறும்பு கோடி கறிக்கு
பயிர் துரும்பும்

1. உப்பிட்டவரை உள்ளளவும் ________ .
2. ________ ஆக்கத்திற்கு அழகு.
3. கரைப்பார் கரைத்தால் ________ கரையும்.
4. சேமிக்கும் ________ சிறப்பான பழக்கம்.
5. சுத்தம் ________ போடும்.

கல்லும் நினை சோறு
ஊக்கம் பழக்கம்

1. ________ மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சு.
2. யானைக்கும் ________ சறுக்கும்.
3. காக்கைக்கும் தன் ________ பொன்குஞ்சு.
4. தனி ________ தோப்பாகாது.
5. நுணலும் தன் ________ கெடும்.

அளவிற்கு அடி வாயால்
மரம் குஞ்சு

1. வல்லவனுக்கு ________ ஆயுதம்.
2. ________ வளையாதது ஐம்பதிலே வளையுமா?
3. ஆறிலுஞ் ________ நூறிலுஞ் சாவு.
4. கற்றது கைம்மண்ணளவு ________ உலகளவு.
5. எய்தவன் இருக்க ________ நோவானேன்?

புல்லும் அம்பை கல்லாதது
ஐந்திலே சாவு

1. கண் கெட்ட ____________ சூரிய நமஸ்காரம்.
2. தம்பி ____________ படைக்கு அஞ்சான்.
3. நெருப்பு இல்லாமல் நீள் ____________ எழும்புமா?
4. ஆவும் ____________ ஐந்து வருடத்தில் பலம் தரும்.
5. கழுதைக்குத் ____________ கற்பூர வாசனை?

தெரியுமா பின்னர் தென்னையும்
புகை உடையான்

1. வெள்ளம் வரும் முன் ____________ வேண்டும்.
2. நொறுங்கத் ____________ நூறு வயது.
3. பூனைக்குக் ____________ எலிக்குத் திண்டாட்டம்.
4. கூழுக்கும் ____________ மீசைக்கும் ஆசை.
5. தன் ____________ தனக்குதவி.

அணைகோல தின்றால் கையே
கொண்டாட்டம் ஆசை

விடுகதைகள்

1. குண்டு ராஜாவுக்கு குடல் முழுக்க பல்

__ __ __

2. ஒளியில் நம்கூடவே இருப்பான், இருளில் மறைந்து கொள்வான்

__ __ __

3. அச்சு இல்லாத சக்கரம்: அழகு காட்டும் சக்கரம்

__ __ __ __

4. பிடுங்கலாம் நடமுடியாது

__ __ __ __

5. விடிய விடிய வேலை செய்பவனுக்கு ஒரு கை சின்னதாம்

__ __ __ __ __

1. ஊர் சுற்ற கூட வருவான் ஆனால் வீட்டுக்குள்ளே வரமாட்டான்

__ __ __ __

2. உடம்பில்லா ஒருவன் பத்து சட்டை அணிந்திருப்பான்

__ __ __ __ __

3. இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது

__ __ __ __

4. பச்சை பொட்டிக்குள் வெள்ளை முத்துகள்

__ __ __ __ __ __

5. கொதிக்கும் கிணற்றில் குதித்துக் குண்டாகி வருவான்

__ __

1. காலையில் வந்த விருந்தாளியை மாலையில் காணவில்லை

__ __ __ __

2. ஓர் அரண்மனையில் முப்பத்திரெண்டு காவலர்கள்

— — — —

3. சிறு தூசி விழுந்ததும் குளமே கலங்கியது

— —

4. பெட்டியைத் திறந்தால் பூட்ட முடியாது

— — — —

5. உயிரில்லாதவனுக்கு உடம்பெல்லாம் நரம்பு

— —

---

1. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம்

— — —

2. பற்கள் இருக்கும் கடிக்கமாட்டான்

— — —

3. அடித்தாலும், உதைத்தாலும் அவன் அழ மாட்டான்

— — —

4. காற்றைக் குடித்து காற்றில் பறப்பான்

— — —

5. உடல் சிவப்பு, வாய் அகலம், உணவு காகிதம்

— — — — — — —

---

1. ஒரு வீட்டுக்கு இரண்டு வாசல்படி

— — —

2. ஊரெல்லாமல் ஒரே விளக்கு. அதற்கு ஒரு நாள் ஒய்வு

— — — — —

3. மீன் பிடிக்கத் தெரியாதாம் ஆனால் வலை பின்னுவானாம்

— — — —

4. நடக்கவும் மாட்டேன், நகராமல் இருக்கவும் மாட்டேன்

— — — — —

5. கசக்கிப் பிழிந்தாலும் கடைசிவரை இனிப்பான்

— — — —

6. செய்வதைச் செய்யும் குரங்கும் அல்ல; சிங்காரிக்க உதவும் சீப்பும் அல்ல

— — — —

**Fill in the blanks using the words given at the bottom.**

1. மணக்கும் எழுத்து : ______________
2. அரசரும், அமைச்சர்களும் கூடும் இடம் : ______________
3. நிலவும், விண்மீன்களும் வானில் தெரியும் நேரம்: ______________
4. நவரசங்களில் ஆச்சரியத்தைக் குறிக்கும்: ______________
5. சிக்கலைக் தீர்க்க உதவும் குணம்: ______________

வியப்பு அரசவை அறிவுக்கூர்மை இரவு பூ

**Fill in the blanks using the words given at the bottom.**

1. வணிகர் ______________ நாட்டைச் சேர்ந்தவர்.
2. உழவர், வணிகர் இருவரின் வழக்கை எதிர்கொண்டவர் ______________
3. திருமண ஊர்வலத்தில் ______________ இறந்து விட்டது.
4. ______________ கீழே விழுந்து நொறுங்கின.

அரபு மரியாதை ராமன் யானை பானைகள்

**Fill in the blanks using the words given at the bottom.**

1. நான் ஒரு ______________ வளர்த்தேன். அதன் பெயர் மணி. அதன் ______________ வெள்ளை. மணி என்னை கண்டவுடன் ______________ ஆட்டும். பிறரைக் கண்டால் லொள் லொள் என ______________ . மணி பாலை விரும்பிக் ______________ . நான் தினமும் அதனுடன் ______________ . இரவில் என் வீட்டைக் காக்கும். மணி ஒரு ______________ மிருகம். நாமும் மிருகங்களுடன் ______________ நடந்து கொள்வோம்.

நிறம் நன்றியுள்ள குலைக்கும் வாலை அன்புடன் குடிக்கும் நாய் விளையாடுவேன்

**Fill in the blanks using the words given at the bottom.**

1. உலகம் என்பதன் வேறு சொல்: ____
2. திருவிழா என்றாலே இது இருக்கும் : ____
3. மக்கள் சேர்ந்து வாழுமிடம் : ____
4. இது இல்லாமல் உயிர்கள் இல்லை : ____

பார் தேர் நீர் ஊர்

**Fill in the blanks using the words given at the bottom.**

1. நீர் விட்டுத் தயிர் கடைந்தால்: ____
2. மரம், செடி, கொடி மண்ணில் ஊன்றி நிற்க உதவும்: ____

3. மன்னர்கள் தம் நாட்டின் எல்லையை விரிவுபடுத்த அண்டை நாடுகளோடு செய்வது : _____

4. பூத்தொடுக்க உதவுவது: _____

மோர் வேர் போர் நார்

## கதை

தங்க முட்டை!



ஒரு விவசாயி தனது மனைவி மற்றும் குடும்பத்துடன் ஒரு கிராமத்தில் வசித்து வந்தார்; அவரிடம் தங்க முட்டையிடும் ஒரு கோழி இருந்தது. தினமும் அந்த கோழி ஒரு தங்க முட்டை அளிக்கும்; அதை விற்று அந்த விவசாயி தனது தினசரி வாழ்க்கையை நடத்தி வந்தார். திடீரென ஒரு நாள் கோழியின் வயிற்றில் இருக்கும் அனைத்து முட்டைகளையும், ஒரே நாளில் எடுத்து விற்றுவிட்டால் அதிக பணம் கிடைக்கும் என்று சிந்தித்த விவசாயி, அதனை தனது மனைவியிடம் கூறினான்.

அவன் மனைவியும் கொஞ்சம் கூட யோசித்து பார்க்காமல், சரி என்று கூற, அச்சமயமே அவர்கள் கோழியை அறுத்து அதிலிருந்து தங்க முட்டைகளை எடுக்க முயன்றனர்; ஆனால் தங்கமுட்டைகளுக்குப் பதிலாக கோழியின் உடலில் இருந்து இரத்தமே வெளிப்பட்டது. தம்பதியர் பெரும் ஏமாற்றம் அடைந்ததுடன் தங்களுக்கு இத்தனை நாள் சோறு போட்டுக்கொண்டிருந்த பெரும் மூலதனத்தையும் இழந்து தவித்தனர்.

*நீதி: பேராசை பெரும் இழப்பு*

சரியான விடையை தேர்ந்தெடு

1. விவசாயி வளர்க்கும் கோழியின் சிறப்பு என்ன?
a. தினமும் ஒரு தங்க முட்டை இடும்
b. தினமும் ஒரு வெள்ளி முட்டை இடும்
c. தினமும் அதிகாலையில் எழுந்துவிடும்

2. விவசாயி எப்படிப்பட்ட குணம் கொண்டவர்?
a. கடின உழைப்பாளி
b. உதவி மனப்பான்மை உள்ளவர்
c. பேராசை கொண்டவர்

3. வியாபாரி ஏன் கோழியைக் கொன்றார்?
a. கோழியை சமைக்க விரும்பினார்
b. கோழி நிறைய சிரமங்களை ஏற்படுத்தியது
c. அனைத்து தங்க முட்டைகளையும் சேகரிக்க விரும்பினார்

4. கதையின் முடிவில் வியாபாரி மிகவும் ______ அடைந்தார்.
a. மகிழ்ச்சி
b. வருத்தம்
c. அமைதி
d. ஏமாற்றம்

5. கதை உணர்த்தும் நீதி என்ன?
a. வாழ்க்கை பிரச்சனைகள் நிறைந்தது
b. பேராசை கொள்ளாமல் இருப்பதை வைத்து மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்
c. தங்க முட்டையிடும் கோழியை ஒருபோதும் கொல்லாதீர்கள்

விவசாயியும் கிணறும்!



ஒரு விவசாயி, தனது விவசாய நிலங்களுக்கு நீர் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். அச்சமயம் ஒரு தந்திரமான விவசாயிடம் இருந்து கிணற்றை விலைக்கு

வாங்கினார். பின் அந்தத் தந்திரமான நபர், அந்த விவசாயியைக் கிணற்றில் இருந்து நீர் எடுக்கக் கூடாது என்று ஆணையிட்டார். விவசாயி,' ஏன் நீர் எடுக்கக்கூடாது?' என்று கேட்டதற்கு, 'நான் உனக்கு கிணற்றை தான் விற்றேன். நீரை அல்ல!' என்று கூறி விட்டு அலட்சியமாக நடந்து சென்றார்.

இதை குறித்து விவசாயி, அக்பர் அரசின் மிகச்சிறந்த அறிவாளியாக விளங்கிய 'நீதியரசர் பீர்பால்' அமைச்சராக இருக்கும் நீதிமன்றத்தில் முறையிட்டார். வழக்கை நன்கு கேட்டறிந்த பீர்பால் வழக்கின் தந்திரத்தைப் புரிந்து கொண்டு வழக்கை விசாரிக்கத் தொடங்கினார்.

அச்சமயம் இருவரின் வாதத்தையும் கேட்டுவிட்டு, பீர்பால்,' தந்திரமான விவசாயி கூறுவது நியாயம்தான்.' என்று கூறி, ஒரு நிபந்தனை இட்டார். 'கிணறு விற்கப்பட்டது; ஆனால் நீர் விற்கப்படவில்லை; ஆகையால், நீங்கள் கிணற்றில் இருக்கும் நீரை இன்றே அகற்றிவிட வேண்டும்; இல்லையேல் நீர் அவருக்கே சொந்தமாகிவிடும்.' என்று அந்த நிபந்தனையையே தீர்ப்பாக வாசித்தார். அந்த தந்திரமான விவசாயியும், தன் தவறை உணர்ந்து விவசாயி நண்பரிடம் மன்னிப்பு கேட்டார்.

*நீதி: ஏமாற்றுவது ஒரு நல்ல பழக்கமல்ல, இது அதிக காலத்திற்கு பலன் அளிக்காது; மீறி நீங்கள் யாரையேனும் ஏமாற்றினால், அதற்கான பலனை விரைவில் அனுபவிப்பீர்.*

<u>சரியான விடையைத் தேர்ந்தெடு</u>

1. கிணற்றை விற்பனை செய்தது யார்?
a. பீர்பால்
b. அக்பர்
c. விவசாயி

2. விவசாயி ஏன் கிணற்றை வாங்கினார்?
a. கழுவுவதற்கு
b. குடிப்பதற்கு
c. பாசனத்திற்காக

3. நீதிமன்றத்தில் விவசாயின் அறிக்கை என்ன?
a. அவர் கிணற்றை மட்டுமே விற்றார், அதில் உள்ள தண்ணீரை அல்ல.
b. அவர் கிணற்றை விற்கவில்லை.
c. அவர் விவசாயிடம் பணம் பெறவில்லை.

4. நீதிக்காக விவசாயி யாரை அணுகினார்?
a. அக்பர்
b. பீர்பால்
c. நீதிமன்றம்

5. பீர்பால் வழக்கை எப்படி தீர்த்தார்?
a. அவர் தனது தண்ணீரை எடுத்துச் செல்லுமாறு விவசாயிடம் கேட்டார்.
b. தண்ணீருக்கு வாடகை கொடுக்கும்படி அவர் விவசாயிடம் கேட்டார்.
c. அவர் தண்ணீரை தொடர்ந்து பயன்படுத்துமாறு விவசாயிடம் கேட்டார்.

<u>ஓநாயும் ஆடு மேய்க்கும் சிறுவனும்</u>

முன்னொரு காலத்தில், ஒரு ஆடு மேய்க்கும் இடையச் சிறுவன் தனது ஆடுகளை மேய விட்டுfவிட்டு மரத்தினடியில் அமர்ந்து கொண்டு இருந்தான். பணி ஏதும் இன்றி ஓய்வாக அமர்ந்திருப்பது அலுப்பு ஏற்படுத்த, விளையாடும் எண்ணத்துடன், 'ஓநாய்! ஓநாய் வருகிறது! என் ஆடுகளைக் கொன்று புசிக்க ஓநாய் வருகிறது!' என்று கூக்குரலிட்டான் சிறுவன். இந்த சிறுவனுடைய கூக்குரலைக் கேட்டு அக்கம் பக்கத்து வயல்களில் விளையாடிக் கொண்டிருந்த நபர்கள் சிறுவன் இருக்கும் இடத்தை நோக்கி விரைந்தனர்.

சிறுவன் அருகே அனைவரும் வந்து பார்த்தால், அவன் கவலையின்றி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தான். மேலும் அங்கு வருகை புரிந்தவர்களைப் பார்த்து இடைவிடாது நகைக்கத் தொடங்கினான். வருகை தந்தவர்கள் இவ்வாறு பொய்யுரைக்க வேண்டாம் என்று சிறுவனைக் கண்டித்துவிட்டு, தங்களது பணிகளைப் பார்க்க சென்றுவிட்டனர்.

சிறிது நேரத்திற்கு பின் மீண்டும் சிறுவன் முன்பு போலவே,'ஓநாய்! ஓநாய் வருகிறது!'என்று கத்தினான்.இம்முறையும் சத்தம் கேட்டு ஓடிவந்த மக்கள், அவனது கேலிச்சிரிப்பைக் கண்டு,கோபமுற்று, 'இவ்வாறு பொய் கூறாதே! மீறி கூறினால் உண்மையாக இது போன்ற சம்பவம் நேருகையில் உனக்கு யாரும் உதவ முன்வரமாட்டார்கள்.' என்று அறிவுறுத்திவிட்டு சென்றனர்.

சிறுவன் மீண்டும் சிறிது நேரத்திற்கு பின் மூன்றாவது முறையாக 'ஓநாய் வருகிறது! ஓநாய்!' என்று கூக்குரலிட்டான். அவன் மீண்டும் பொய்யுரைக்கிறான் என்று எண்ணி கிராம மக்கள் யாரும் அவனை காப்பாற்ற முன்வரவில்லை. ஆனால் இம்முறை உண்மையாகவே ஓநாய் வந்து அவன் மேய்த்துக்கொண்டிருந்த ஆடுகளைத்

துவம்சம் செய்துவிட்டு சென்றுவிட்டது.

இதனால் மனம் வருந்தி அழுது கொண்டே சிறுவன் மலையில் அமர்ந்துவிட்டான். மாலை வெகுநேரம் ஆகியும் சிறுவன் வீடு திரும்பாததால், அவனின் பெற்றோர் கிராமத்தாரின் உதவியுடன் சிறுவனைத் தேடிக்கொண்டு மலைப்பகுதிக்குச் சென்றனர். அங்கு அழுது கொண்டிருந்த சிறுவனிடம் விவரம் கேட்ட பொழுது, அவன், 'உண்மையாகவே ஓநாய் வந்தது; அப்பொழுது நான் உங்களை அழைத்தேன் யாரும் உதவிக்கு வரவில்லை. ஓநாய் ஆடுகளை விரட்டியதால், ஆடுகள் சிதறி நாலாப்பக்கமும் சென்று விட்டன. நான் அழைத்தும் யாரும் உதவ முன்வராதது ஏன்?' என்று கேட்டான்.

அப்பொழுது கிராமத்தை சார்ந்த ஒரு முதியவர், 'மக்கள் பொய்யர்களை நம்பமாட்டார்கள். அவர்கள் உண்மையையே கூறினாலும் பொய்யர்களின் பேச்சினை யாரும் உண்மை என கருதமாட்டார்கள்.' என்று உரைத்தார்; பின் வாருங்கள் அனைவரும் வீட்டிற்கு செல்லலாம், காலை விடிந்ததும் ஆடுகளைத் தேடலாம் என்று கூறி அனைவரையும் இல்லம் நோக்கி செல்லுமாறு உரைத்தார்; சிறுவன் உட்பட அனைத்து மக்களும் இல்லத்தை நோக்கி செல்லத் தொடங்கினர்.

*நீதி: பொய்மை நம்பிக்கையை உடைக்க வல்லது, பொய்யர்கள் உண்மையையே கூறினாலும், யாரும் அவர்களை நம்பமாட்டார்கள்!*

## ஒரு மனிதனும் பூனையும்!

ஒரு நாள் ஒரு நபர் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தார்; அச்சமயம் ஒரு புதரில் ஓர் பூனை மாட்டிக்கொண்டு விடுபட வழியில்லாமல் தவித்துக் கொண்டிருந்தது. புதரில் மாட்டிக்கொண்டு விடுபட முடியாததால் பூனை மிரண்டு போயிருந்தது. அதன் நிலையைக் கண்ட அந்த நபர் அதற்கு உதவ முற்பட்டார். புதரில் மாட்டியிருந்த பூனையை வெளியே கொண்டு வர முயற்சிக்கையில் பூனை தனது கரங்களால் அந்த நபரை கீறி, காயத்தை ஏற்படுத்தியது.

அந்த நபர் ஒவ்வொரு முறை அதைத் தொட்டு விடுவிக்க முயற்சிக்கையிலும், அப்பூனை இவ்வாறு கீறுவதை தொடர்ந்தது. சாலையில் சென்று கொண்டிருந்த மற்றொரு நபர் இதைப் பார்த்துவிட்டு, பூனைக்கு உதவ முயலும் நபரிடம், ‘அப்பூனையை அப்படியே விட்டு விடுங்கள்; வீணாக நீங்கள் காயம் அடைவது ஏன்? அதுவே வெளியே வந்து விடும் என்று அறிவுறுத்தினார்.’

ஆனால் பூனைக்கு உதவிக்கொண்டிருந்த நபர், மற்றொரு நபர் கூறிய அறிவுரையைக் காதிலேயே வாங்கி கொள்ளாமல், பூனையை விடுவிக்க முனைந்தார். பின்னர் அந்த நபரிடம், ‘பூனை ஒரு மிருகம். அதனால் அது அதன் தன்மையை வெளிப்படுத்தியது. நான் ஒரு மனிதனாக நான் எனது மனிதத்தன்மையை வெளிப்படுத்தினேன்.’ என்று கூறினார்.

*நீதி: உன்னைப்போல் பிறரையும் நேசி! உனக்கான குறிக்கோள் மற்றும் கொள்கைகளை நீயே வகுத்து, அதன்படி நடக்க முயல்வாயாக! பிறரின் தேவையற்ற அறிவுரையைச் செவிமடுக்காது இருப்பாயாக!*

## தீய பழக்கங்கள்!

ஒரு பணக்கார தொழிலதிபரின் மகன் அதிக தீய பழக்கங்கள் கொண்டவனாக விளங்கினான்; அவனை திருத்த எவ்வளவோ முயன்றும் அந்த தொழிலதிபரால் வெற்றி பெற முடியவில்லை. ஆகையால், அவர் ஒரு வயது முதிர்ந்த ஞானியிடம் தனது பையனைத் திருத்த உதவி கேட்டார். அந்த ஞானியும் ஒப்புக்கொண்டு அத்தொழிலதிபரின் பையனை சந்தித்து நடை பயணம் மேற்கொள்ள அழைத்து சென்றார்.

அச்சமயம் அவர்கள் இருவரும் வனப்பகுதியில் நடைப்பயணம் மேற்கொண்டிருக்கையில், அந்த வயதான ஞானி சிறுவனிடம் ஒரு சிறு செடியைக் காட்டி, 'அதை உன்னால் பிடுங்க இயலுமா?' என்று கேட்டார்; சிறுவனும் உடனே அதைப் பிடுங்கிக் காட்டினான். பின்னர் ஞானி சற்று பெரிய தாவரத்தை காட்டி, 'இதை பிடுங்க இயலுமா?' என வினவினார்; சிறுவனும் எளிதாகப் பிடுங்கிக் காட்டினான்.

சற்று தூரம் சென்ற பின் ஒரு முட்புதரைக் காட்டி, இதனைப் பிடுங்கிட முடியுமா என்று வினவ சிறுவனும் தனது சக்தியைப் பயன்படுத்தி அதைப் பிடுங்கிக் காட்டினான்; பின்னர் ஞானி ஒரு சிறிய மரத்தைக் காட்ட, பெரும்முயற்சி மேற்கொண்டு சிறுவன் அதை சாய்த்துக் காட்டினான். இப்பொழுது ஞானி வயது முதிர்ந்த ஒரு பெரிய மரத்தைக் காட்டி பிடுங்குமாறு சிறுவனிடம் கூற, சிறுவன் செய்வதறியாது நின்றான். அப்பொழுது ஞானி சிறுவனிடம், 'பழக்கங்களும் இது போன்றதே! தீயப் பழக்கத்தை முளையில் கிள்ளி எறிந்துவிடலாம். ஆனால் அது வளர்ந்து விட்டால், அதிலிருந்து விடுபட்டு நற்பழக்கங்களை மேற்கொள்வது கடினம்.' என்று கூறினார்.

*நீதி: தீய பழக்கங்கள் நமது வழக்கமாகி விட்டால், அவற்றிலிருந்து மீள்வது கடினம்; ஆகையால், அவற்றை ஆரம்ப கால கட்டத்திலேயே கிள்ளி எறிந்து விட வேண்டும்.*

## கோபத்தை கட்டுப்படுத்துதல்!

ஒரு பையன் எதற்கெடுத்தாலும் மிகவும் கோபப்படுபவனாக இருந்தான். அவன் கோபத்தில் பேசும் வார்த்தைகள் மற்றும் செயல்கள் அவனது வீட்டார் மற்றும் சுற்றத்தாரைப் பெரிதும் காயப்படுத்தின. பையனின் நிலையை மாற்ற விரும்பிய அவனது தந்தை, அவனிடம் ஒரு சுத்தியல் மற்றும் பை நிறைய ஆணிகளை தந்து, 'உனக்கு எப்பொழுதெல்லாம் கோபம் வருகிறதோ அச்சமயம் வீட்டின் பின்புறத்தில் இருக்கும் மரவேலியில் இந்த ஆணிகளை அடித்து விடு.' என்று கூறினார்.

பையனும் தந்தை கூறியவாறே செய்து வந்தான்.பையிலுள்ள ஆணிகள் விரைவில் தீர்ந்து போயின. தந்தை அடுத்த ஆணிகள் நிறைந்த பையைப் பையனிடம் கொடுத்தார். இவ்வாறு தொடர்ந்து செய்து வருகையில் தனது கோபம் குறைந்து,உணர்வுகள் கட்டுப்பாட்டிற்குள் வருவதை பையன் உணர்ந்தான். பின்னர் அதை அவனது தந்தையிடம் தெரிவித்தப் பொழுது, அவன் தந்தை,'இப்பொழுது நீ மரவேலியில் அடித்த ஆணிகளை எடுத்து விடு.' என்று கூறினார்.

தந்தை கூறியவாறு அடித்த அத்தனை ஆணிகளையும் எடுக்கையிலும் கூட, பையனுக்குக் கோபம் ஏற்படவில்லை; இதையும் கவனித்த தந்தை, தனது பையனை அழைத்து, 'இப்பொழுது உன் கோபம் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிட்டது. ஆனால், நீ ஒரு விஷயத்தை கவனித்தாயா?'என்று கூறி, வண்ணம் தீட்டிய மரவேலியைக் காட்டி, அதில் நீ அடித்த ஆணிகளை நீக்கிய பின்பு ஏற்பட்டுள்ள துளைகளைக் கவனித்தாயா? என்ன தான் வண்ணம் தீட்டி இருப்பினும் அத்துளைகள், மரவேலியின் அழகை குழைக்கின்றன. இதுபோல்தான் முதலில் நீ கோபப்பட்டு, தற்பொழுது அந்தக் குணத்தை விட்டு மீண்டு வந்திருந்தாலும் நீ பேசிய கோப வார்த்தைகளால் மற்றவர் மனதில் ஏற்பட்ட காயம் இத்துளைகள் போலவே ஆறாமல் இருக்கும். ஆகையால் இது போன்ற ஒரு தவறை இனி என்றும் உன் வாழ்நாளில் செய்யலாகாது.' என்று அறிவுரை கூறினார்.

*நீதி: கோபம் என்பது ஒரு கத்தியைப் போன்றது; கத்தியைக் கொண்டு ஒரு மனிதனைக் குத்தினால், அதனால் ஏற்பட்ட காயம் ஆறிய பின்னும் அதனால் ஏற்பட்ட தழும்பு அந்நபரில் நிலைத்திருக்கும். அது போன்றே கோபத்தால் பேசிய வார்த்தைகளும் மனதில் ஆறா தழும்பை ஏற்படுத்திவிடும்.*

## மூத்தோர் சொல் கேள்!

ஒரு தாய் நாய் அதன் குட்டிகளுடன் ஒரு வயலின் அருகில் வசித்து வந்தது. எப்பொழுதும் தாய் நாய்க் குட்டிகளிடம், எங்கு வேண்டுமானாலும் சென்று விளையாடுங்கள், ஆனால் அந்த கிணற்றின் அருகே செல்ல வேண்டாம் என்று கூறி இருந்தது. ‘அன்னை ஏன் கிணற்றின் அருகே செல்ல வேண்டாம் என்று கூறுகிறார்? அப்படி அங்கு என்ன தான் இருக்கிறது’ என யோசித்த ஒரு குட்டி நாய், கிணற்றின் அருகே சென்று எட்டிப் பார்த்தது.

அச்சமயம் நாயின் பிரதிபலிப்பு நீரில் தோன்றியது; குட்டி நாய் என்னென்ன செய்கிறதோ, அதை கிணற்று நீர் பிரதிபலித்தது. ஆனால் கிணற்றின் உள்ளே இருக்கும் வேறொரு நாய் தன்னைக் கேலி செய்வதாக எண்ணிய குட்டி நாய், அந்த கிணற்றிலிருக்கும் நாயுடன் சண்டையிடும் நோக்கில், கிணற்றில் குதித்தது. குதித்த பின்னர் தான் நாய்க்குப் புரிந்தது; அது தனது பிரதிபலிப்பு என்று. மேலே எப்படி செல்வது என்று அறியாமல், குரைத்து கொண்டே நீரில் நீந்திக்கொண்டிருந்தது குட்டி நாய்.

நாயின் குரைப்பு சத்தம் கேட்ட விவசாயி, நாயைக் கிணற்றில் இருந்து காப்பாற்றினார்; அச்சமயம் தாய் நாயின் அறிவுரையை மீறியது எத்தனை பெரிய தவறு என்று உணர்ந்து கொண்டது.

*நீதி: மூத்தோர் வார்த்தையை எப்பொழுதும் காதுகொடுத்துக் கேளுங்கள்; அவர்கள் கூறுவதில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் அதை கேளுங்கள். ஆனால் அவர்தம் வார்த்தையை நிராகரிக்காதீர்கள்.*

## சுவரின் மறுபக்கம்!

தன் பாட்டி உருவாக்கிய அழகிய தோட்டத்தைப் பக்குவத்துடன் பார்த்து பார்த்து கவனித்து வந்தாள் அந்த அழகான பெண். ஒரு நாள் ஒரு செடியைப் புகைப்படத்தில் பார்த்து, அதன் மலர்களின் அழகில் இலயித்த இந்தப் பெண், அச்செடியை வாங்கி வந்து, தனது தோட்டத்தில் நட்டு வளர்த்து வந்தாள். அந்தச் செடிக்கென பிரத்யேக கவனிப்பு அளித்து வளர்த்து வந்தாள்.

நாட்கள், வாரங்கள், மாதங்கள் பல கடந்தும், அச்செடிப் பூக்களைப் பூக்காமல் இருந்தது கண்டு, மனமுடைந்த அப்பெண் அச்செடியை அகற்றி விட முடிவெடுத்தாள். அச்சமயம் பக்கத்து வீட்டு முதியவர் இப்பெண்ணை அழைத்து, 'அழகான மலர்களைத் தரும் செடியை நட்டு, என் மனதை இன்பவெள்ளத்தில் ஆழ்த்தினாய். இந்த வயதான காலத்தில் மனம் குழம்பி, தனிமையில்

வாடிக்கொண்டிருந்த எனக்கு, நீ நட்டு வைத்த செடியில் பூத்த மலர்கள் மனமாற்றத்தை அளித்தன; அவற்றை காணும் பொழுதெல்லாம் என் மனம் பெருமகிழ்ச்சி அடைகிறது!'என்று மனம் நெகிழ்ந்தாள் அந்த மூதாட்டி.

அப்பொழுது தான் சுவரின் மறுபக்கத்தில் அழகான மலர்கள் மலர்ந்திருந்ததையும், தனது சுவரில் இருந்த பிளவுகளால், மலர்கள் எதுவும் பூக்காமல் இருந்ததையும், அந்தப் பெண் கவனித்தாள். மலர்களைக் கண்டு அவளும் பெருமகிழ்ச்சி அடைந்தாள்.

*நீதி: நீங்கள் செய்த வேலைகளுக்கு நற்பலன் கிடைக்கவில்லை என்று மனம் வருந்தாதீர்; நீர் செய்த கடின உழைப்புக்கு நிச்சயம் ஒரு நாள் பலன் கிடைத்தே தீரும்.*

## ஒட்டகமும் அதன் குழந்தையும்!

ஒரு ஒட்டகமும் அதன் குட்டியும் பேசிக்கொண்டிருந்தன; அப்பொழுது ஒட்டகக் குட்டி, தாயிடம், "நமக்கு ஏன் திமில் உள்ளது?" என்று கேட்டது; அதற்கு தாய் நாம் பாலைவனத்தில் தண்ணீர்த் தாகம் இன்றி வாழ திமில் உதவும். பின்னர் குட்டி கேட்டது,'நமக்கு வட்டமானப் பாதம் இருப்பதேன்?' என்று. அதற்கு தாய், பாலைவன மணலில் நாம் நடக்க இந்த வட்டமான பாதம் உதவும் என்று பதிலளித்தது.

பின்பு குட்டித் தாயிடம்,' நமக்கு நீளமாக காது மடல்கள் இருப்பதேன்?" என்று கேட்டது. அதற்கு தாய்," பாலைவனத்தில் மணல் நம் காதுகளுக்குள் சென்று விடாமல் தடுக்கவே பெரிய காது மடல்கள் நமக்கு அளிக்கப்பட்டுள்ளன.' என்று விடை அளித்தது.

எல்லா பதில்களையும் கேட்ட குட்டி ஒட்டகம், "இவை அனைத்தும் நாம் பாலைவனத்தில் இருந்தால் தானே பயன்படும், நாம் இருப்பதோ சரணாலயத்தில் அல்லவா? பின் இவற்றால் என்ன பயன்?" என்று கேட்டது. இதைக் கேட்ட தாய் வாயடைத்து நின்றது.

*நீதி: நீங்கள் ஒரு சரியான இடத்தில் இருந்தால் மட்டுமே, உங்கள் சக்தி, ஆற்றல், திறன் ஆகிய எல்லாமே பயன்படும்.*

## நான்கு மாடுகளும் புலியும்!

நான்கு மாடுகள் மிகவும் நெருக்கமான நண்பர்களாக வாழ்ந்து வந்தன. ஒன்றாக சேர்ந்து வளர்ந்து, உண்டு, ஒன்றாகவே இருந்து வந்தன. இவர்களின் ஒற்றுமை காரணமாக சிங்கமோ, புலியோ இவற்றை இரையாக்க முடியாமல் இருந்தன. அந்த அளவுக்கு நான்கு மாடுகளும் ஒற்றுமையுடன் இருந்தன.

சில நாட்களுக்கு பின், மாடுகளுக்குள் ஏற்பட்ட சண்டையால் அவை பிரிந்தன. பின் இதை சாதகமாக்கிக் கொண்ட புலி, அவற்றை மறைந்திருந்து, ஒவ்வொன்றாக வேட்டையாடிக் கொன்று, இறுதியில் அனைத்தையும் தனக்கு உணவாக்கிக் கொண்டது.

*நீதி: ஒற்றுமையே பலம்; ஒற்றுமையாக இருந்தால் அதிக நன்மை ஏற்படும்.*

## பறவையும் ஆமையும்!

ஒரு பறவை கூடு கட்டியிருந்த மரத்தின் கீழ், ஓய்வு எடுத்துக்கொண்டிருந்த ஆமை, மரத்தில் இருந்த பறவையிடம் பேச்சு கொடுத்தது. அப்பொழுது பறவையின் கூடு அழகாக இல்லை என்றும், அசிங்கமாக, உடைந்த குச்சிகளால் கட்டப்பட்டுள்ளது என்றும் ஆமை, பறவையை மட்டம் தட்டிக் கேலி பேசியது. ஆனால், தனது வீடான தன் முதுகின் மீதுள்ள ஓடு,சரியான வடிவம் கொண்டு பலமாக இருப்பதாகக் கூறியது.

அதைக் கேட்ட பறவை என்னுடைய கூடு உடைந்து அசிங்கமாக இருந்தாலும், இயற்கையில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு நானே உருவாக்கியது; இது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது என்று பதிலளித்தது.

மேலும் ஆமை, தனது கூட்டை விட உனது கூடு சிறந்தது அல்ல என்று பறவையிடம் கூறியது. அதைக்கேட்ட பறவை தனது கூடு தான் உனது கூட்டினை விட சிறந்தது; ஏனெனில் தனது குடும்பம் மற்றும் நண்பர்கள் தன்னுடன் இந்த கூட்டில் சேர்ந்து வாழ முடியும்; ஆனால் உனது கூட்டில் உன்னை தவிர வேறு யாரும் நுழையக்கூட முடியாது என்று மகிழ்ச்சியுடன் பதிலளித்தது.

*நீதி: தனியாக பெரிய பங்களாவில் வசிப்பதை விட, உறவு மற்றும் நண்பர்களுடன் ஒரு சிறிய குடிசையில் வசிப்பது மேல்!*

## நீர் இறைத்த திருடர்கள்

ஒரு சமயம் விஜயநகர ராஜ்யத்தில் கடும் வறட்சி ஏற்பட்டது. பருவ மழை தவறி விட்டதால் குளம், குட்டை, ஏரி எல்லாம் வற்றிவிட்டது. தெனாலிராமன் வீட்டுக் கிணற்றிலும் நீர் குறைந்து அதிக ஆழத்திற்குப் போய்விட்டது. இதனால் தினமும் தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்ச மிகவும் சிரமப்பட்டான் தெனாலிராமன்.

இந்த சமயத்தில் ஒரு நாள் இரவு நான்கு திருடர்கள் தன் தோட்டத்தில் பதுங்கி இருப்பதைக் கண்டான். உடனே வீட்டிற்கு வந்து தன் மனைவியிடம், 'அடியே, நம் நாட்டில்

பருவ மழை தவறிவிட்டதால், பஞ்சம் ஏற்பட்டு விட்டது. எனவே நிறைய திருட்டு நடக்க ஆரம்பித்து விட்டது. பஞ்ச காலம் முடியும் வரை நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். எனவே நாம் ஒரு காரியம் செய்வோம்' என்று வெளியே பதுங்கியிருந்த திருடர்களுக்கு கேட்கும் வண்ணம் உரத்த குரலில் பேசினான்.

'அதற்கு என்ன செய்யலாம்?' என்று தெனாலிராமனின் மனைவி கேட்டாள். 'வீட்டிலுள்ள நகை, மற்றும் விலையுயர்ந்த பொருட்களை எல்லாம் இந்தப் பெட்டியில் போட்டு பூட்டு. நாம் இந்தப் பெட்டியை யாருக்கும் தெரியாமல் கிணற்றில் போட்டு விடலாம். பஞ்சம் தீர்ந்து திருட்டுப் பயம் ஒழிந்ததும் மீண்டும் கிணற்றிலிருந்து எடுத்துக் கொள்ளலாம்' என்று முன்போலவே உரக்கக் கூறினான் தெனாலிராமன்.

திருடர்களும் இதைக் கேட்டனர். அதே சமயம் ரகசியமாக தெனாலிராமன் தன் மனைவியிடம் திருடர்கள் ஒளிந்திருப்பதைக் கூறி ஒரு பழைய பெட்டியில் கல், மண், பழைய பொருட்களை எல்லாம் போட்டு மூடினான். அந்தப் பெட்டியைத் தூக்க முடியாமல் தூக்கி வந்து கிணற்றுக்குள் 'தொப்'பென்று போட்டுவிட்டு வீட்டுக்கு திரும்பிவிட்டான் தெனாலிராமன். திருடர்களும், 'தெனாலிராமன், வீட்டிற்குள் புகுந்து திருடும் நம் வேலையை சுலபமாக்கிவிட்டான். நாம் எளிதாக கிணற்றிலிருந்து பெட்டியை எடுத்துக் கொள்ளலாம்' என்று தங்களுக்குள் பேசிக் கொண்டே பெட்டியை எடுக்க கிணற்றுக்கு அருகே வந்தனர் திருடர்கள்.

கிணறு ஆழமாக இருந்ததால் உள்ளே இறங்கப் பயந்த திருடன் ஒருவன், 'அண்ணே! தண்ணீர் குறைவாகத்தான் உள்ளது.

நாம் நால்வரும் ஏற்றம் மூலம் மாற்றி மாற்றி நீரை இறைத்து விட்டால் சுலபமாகப் பெட்டியை எடுத்துக் கொண்டு போகலாம்' என்று கூறினான். அதைக்கேட்ட மற்றவர்களும் அவன் திட்டத்துக்கு ஒப்புக்கொண்டனர். அதன்படி ஒருவர் மாற்றி ஒருவர் ஏற்றம் மூலம் நீர் இறைக்கத் தொடங்கினர். சற்று நேரம் கழித்து வேறு வழியாக தோட்டத்திற்கு சென்ற தெனாலிராமன், திருடர்கள் இறைத்து ஊற்றிய நீரை தன் தோட்டத்தில் உள்ள செடிகளுக்கும், கொடிகளுக்கும், பயிர்களுக்கும் பாயுமாறு கால்வாயைத் திருப்பி விட்டான். இப்படியே பொழுது விடிந்தது விட்டது.

ஆனால் கிணற்றில் தண்ணீர் குறையவில்லை. இதனால் திருடர்களும், 'நாளை இரவு மீண்டும் வந்து நீரை இறைத்து விட்டு பெட்டியை எடுத்துக் கொள்ளலாம்' என்று பேசிக் கொண்டு சென்றனர்.

அப்போது தோட்டத்திலிருந்து வந்த தெனாலிராமன் அவர்களைப் பார்த்து, 'நாளைக்கு வரவேண்டாம். நீங்கள் இறைத்த தண்ணீர் இன்னும் மூன்று தினங்களுக்குப் போதும். எனவே மூன்று தினங்கள் கழித்து வந்தால் போதும். உங்கள் உதவிக்கு நன்றி நண்பர்களே!' என்று கூறினான்.

திருடர்களுக்கு இதைக் கேட்டதும் மிகவும் அவமானமாய் போய்விட்டது. தங்களை ஏமாற்றி நீர் இறைக்கச் செய்த தெனாலிராமனின் அறிவை மனத்திற்குள் எண்ணி வியந்தனர். மேலும் அங்கே இருந்தால் எங்கே மாட்டிக் கொள்வோமோ என்ற அச்சத்தில் திரும்பிப் பார்க்காமல் ஓட்டம் பிடித்தனர் திருடர்கள்.

சரியான விடையை தேர்ந்தெடு

1. திருடர்கள் மறைந்திருந்த இடம் எது?
   a. ஜன்னலுக்கு பின்னால்
   b. கிணற்றுக்கு பின்னால்
   c. தோட்டம்

2. தெனாலிராமன் கிணற்றில் எதை மறைத்து வைத்தார்?
   a. பெட்டி
   b. நாற்காலி
   c. பானை

3. இரவில் தெனாலிராமனுக்கு என்ன சத்தம் கேட்டது?
   a. தண்ணீர் சொட்டும் சத்தம்
   b. இலைகளின் சலசலப்பு
   c. நரிகளின் அலறல் சத்தம்

4. தெனாலிராமனின் புத்திக்கூர்மையைக் கண்டு திருடர்கள் ______________
   a. பணஉதவி கேட்டனர்
   b. மன்னிப்பு கேட்டனர்
   c. வெட்கப்பட்டனர்

5. தெனாலிராமனுக்கு திருடர்களால் கிடைத்த உதவி என்ன?
   a. கிணற்றிலிருந்து பெட்டியை எடுத்தனர்
   b. செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுதல்
   c. கிணற்றை சுத்தம் செய்தல்

## தெனாலிராமனும் கத்தரிக்காயும்



ஒரு முறை தெனாலிராமனுக்கு கத்தரிக்காய் சாப்பிட வேண்டும் என்று அதீத விருப்பம் ஏற்ப்பட்டது. அரண்மனைத் தோட்டத்தில் பிஞ்சு கத்திரிக்காய் அதிகமாக விளைந்திருப்பதைக் கேள்விப்பட்டார். ஆனால் அது அரசாங்கத்திற்குச் சொந்தமானது. நாம் உபயோகிக்கக் கூடாது என்ன செய்வது. என்னவென்றாலும் இன்று கத்தரிக்காய் சாப்பிட்டே தீருவது என்று தீர்மானித்த தெனாலிராமன் ஒரு ஆலோசனை செய்தார். காவலாளிக்கு தெரியாமல் கத்தரிக்காய் அனைத்தையும் சத்தமில்லாமல் பறித்துக் கொண்டார்.

வீட்டுக்கு சென்று மனைவியிடம் "இன்றைக்கு விதவிதமாய் கத்தரிக்காய் பதார்த்தம் செய்" என்றார். தெனாலிராமன் கொண்டுவந்த கத்தரிக்காய் அரண்மனை தோட்டத்திலிருந்து பறித்து வந்தது என்று தெரிந்ததும் தெனாலிராமனது மனைவி மிகவும் கலக்கமடைந்தார். தெனாலிராமன் "நீ பயப்படாதே! எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன். நீ சமைத்து வை" என்றார். அவரது மனைவியும் மறுபேச்சு பேசாமல் கத்தரிக்காய் குழம்பு, கத்தரிக்காய் கூட்டு என்று வித விதமாக செய்து வைத்தார். இருவரும் சாப்பிடத் தயாரானார்கள்.

தெனாலிராமன் தனது மகனை எங்கே என்று கேட்டார். அவன் வெளித்திண்ணையில் படுத்து உறங்கிக் கொண்டிருப்பதை மனைவி தெரிவித்தார். உடனே தெனாலிராமனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

அவர் ஒரு குடம் நிறைய தண்ணீரைக் கொண்டுவந்து திண்ணையில் படுத்திருந்த தனது மகன் மீது ஊற்றினார். பதறியடித்து எழுந்த மகனைப் பார்த்து "வெளியே மழை பெய்கிறது, உள்ளே போய் படுத்துக் கொள்" என்று கூறினார்.

அரைத்தூக்கத்தில் இருந்த மகனும் அவர் சொன்னதைக் கேட்டவுடன் வேக வேகமாக வீட்டுக்குள் சென்றான். படுத்துறங்கப் போனவனை தெனாலிராமன் எழுப்பி "கத்தரிக்காய் சாப்பாடு ருசியாய் இருக்கிறது, சாப்பிட்டு விட்டு தூங்கு" என்று கூறினார்.

அவனும் தூக்கக்கலக்கத்துடனேயே நன்றாகச் சாப்பிட்டான். பிறகு எல்லோரும் படுத்து நிம்மதியாய் தூங்கினார்கள். மறுநாள், தெனாலிராமன் அரண்மனைத் தோட்டத்தில் கத்தரிக்காய் பறித்த விஷயம் எப்படியோ மன்னருக்குத் தெரிந்து போனது.

மன்னர் தெனாலிராமனை அழைத்து வரச் சொன்னார். நடக்கப் போவதை யூகித்துக் கொண்ட தெனாலிராமனும் மன்னர் முன் சென்று நின்றார். மன்னர் தெனாலியைப் பார்த்து கேட்டார்" தெனாலிராமா! அரண்மனைத் தோட்டத்தில் கத்தரிக்காய் எல்லாம் காணாமல் போனது உனக்குத் தெரியுமா ? என்றார். தெனாலிராமனோ எதுவும் அறியாதது போல "என்ன? அரண்மனைத் தோட்டத்துக் கத்தரிக்காய் காணாமல் போனதா?" என்றார்.

மன்னரோ விடுவதாய் இல்லை. "ஒன்றும் அறியாதது போல் கேட்கிறாய் ராமா! நீ தான் கத்தரிக்காய் அனைத்தையும் பறித்ததாக நான் கேள்விப்பட்டேன். உண்மையை ஒத்துக் கொள்" என்றார். தெனாலிராமனோ "இல்லவே இல்லை" என்று சாதித்தார்.

மன்னர் உடனே தெனாலிராமா "நீ உனது மகனை அழைத்து வா. குழந்தைகள் பொய் சொல்லாது. நேற்று நீங்கள் என்ன சாப்பிட்டீர்கள் என்பதை நான் உன் மகனை விசாரித்து தெரிந்து கொள்கிறேன். " என்றார்.

தெனாலிராமனது மகனை காவலாளிகள் அழைத்து வந்தார்கள். மன்னன் சிறுவனிடம் அன்பாக விசாரித்தார். "தம்பி நேற்று உங்கள் வீட்டில் என்ன சாப்பிட்டீர்கள்?" உடனே சிறுவன் சொன்னான் "கத்தரிக்காய் குழம்பு, கத்தரிக்காய் கூட்டு மற்றும் சாதம் எல்லாம் சாப்பிட்டோம். மிகவும் ருசியாக இருந்தது."

உடனே மன்னன் தெனாலிராமனைப் பார்த்தார். இப்போது மாட்டிக் கொண்டாயா தெனாலிராமா. இப்போதாவது உண்மையை ஒத்துக் கொள்" என்றார். தெனாலிராமனோ விடாப்பிடியாக மறுத்தார். "மன்னா, இவன் இரவில் கனவு கண்டு அதை உளறுகிறான். நன்றாக விசாரியுங்கள். நீங்கள் நம்பும்படியாக அவன் கூறினால் நான் உண்மை என ஒத்துக் கொள்கிறேன்". என்றார்.

மன்னன் சிறுவனைப் பார்த்து மீண்டும் கேட்டார். "குழந்தாய் நேற்று உங்கள் வீட்டில் என்ன நடந்தது என்று விளக்கமாகச் சொல்" சிறுவனோ நேற்று இரவு ஜோ வென்று மழை பெய்ததா! அப்பா என்னை வீட்டுக்குள் கூட்டிக் கொண்டு போனாரா...! அப்போ கத்தரிக்காய் வைத்து சாப்பிடச் சொன்னார்களா...! சாப்பிட்டுவிட்டு பிறகு நான் உறங்கி விட்டேன்" என்றான்.

தெனாலிராமனோ நேற்று மழை பெய்ததா மன்னா! நீங்களே சொல்லுங்கள் என்று மன்னரை கேள்வி கேட்டார். மன்னர் குழம்பிப் போனார். அவையில் இருந்தவர்களை விசாரித்தார். நேற்று நகரத்தின் எந்தப்பகுதியிலும் மழை பெய்யவில்லை என்று எல்லோரும் சொன்னார்கள்.

மன்னரும் சரி தெனாலிராமன் சொன்னதைப்போல குழந்தை கனவில் கண்டதைத்தான் சொல்கிறான் என்று சொல்லி தெனாலிராமனையும் விடுவித்தார். மனதிற்குள் மகிழ்ந்து கொண்டே தெனாலிராமனும் இடத்தை காலிசெய்தார்.

பிறுதொருநாள் மன்னரிடம் தாம்தான் கத்தரிக்காயை திருடியதாக ஒத்துக் கொண்டு நடந்தவைகளை சொல்ல மன்னர் ஆச்சரியத்துடன் சிரித்து மகிழ்ந்தார். பிறகு தெனாலிராமனின் சாதுர்யத்தை மெச்சி பல பரிசுகளை அளித்து மகிழ்ந்தார்.

தெனாலிராமன் வளர்த்த பூனை



விஜய நகரத்திலுள்ள பெருச்சாளிகள், எலிகள் முதலியவற்றின் தொல்லைகளை நீக்குவதற்காக பெர்ஷிய நாட்டிலிருந்து ஆயிரக் கணக்கில் பூனைக் குட்டிகளை இராயர் தருவித்து ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு பூனையைக் கொடுத்து, அதற்குப் பசும்பால் கொடுத்து வளர்ப்பதற்காக ஒரு பசுவும் கொடுத்தார்.

தெனாலிராமனோ தான் வாங்கி வந்த பசுவின் பாலையெல்லாம் கறந்து பூனைக் குட்டிக்கு வைக்காமல், தானும் தன் மனைவி மக்களுமாகக் குடித்துவிட்டு பூனையை வெறுமனே விட்டு வைத்தான். குறிப்பிட்ட ஒரு தினத்தில் பூனைகளைப் பார்வையிடுவதற்காக இராயர் அனைவரையும் அரண்மனைக்கு வரவழைத்தார்.

எலும்பும் தோலுமான பிரஜைகள் தாங்கள் வளர்த்த கொழு கொழுவென்ற பூனைகளைத் தூக்கி வந்து காட்டினார்கள்.கொழுகொழுவென்று வளர்ந்திருந்த தெனாலிராமனோ பட்டினியால் மெலிந்து போன பூனையை தான் காட்டினான். அதைக்கண்டு ஆத்திரமுற்ற இராயர் 'ராமா உன் பூனைக்குப் பால் வைக்காமல் ஏன் பட்டினி போட்டாய்?' என்று கேட்டார்.

அதற்குத் தெனாலிராமன், 'அரசே! என் பூனை பாலைக் கண்டாலே சாப்பிடாமல் ஓட்டமெடுக்கிறது. நான் என்ன செய்வேன்?' என்றான். அதைக்கேட்டு ஆச்சரியமடைந்த அரசர் 'ராமா! இதென்ன பால் குடிக்காத பூனையும் பூலோகத்தில் இருப்பது உண்டோ?

நீ கூறுவது உண்மையானால் உனக்கு நூறுபொன் பரிசளிப்பேன்!' என்று கூறிவிட்டு அந்தப் பூனையின் முன்னால் பாலை வைக்கும்படிச் செய்தார். பாலைக் கண்டதுமே அந்தப் பூனை ஓட்டமெடுத்தது. வியப்புடன் சிப்பாய்கள் அதைப் பிடித்து வந்து சோதித்தபோது அரசர் அதன் வாயிலுள்ள வெந்த புண்களைக் கண்டு ராமனின் யுக்தியை யூகித்து கொண்டு, 'அட நயவஞ்சகா! பாலைச் சுடச்சுடக் காய்ச்சிப் பூனைக்கு வைத்தாயா? அதுதான் சூடுகண்ட பூனை பாலைக் கண்டதும் ஓட்டம் பிடிக்கிறது!' என்றார்.

தெனாலிராமன் துணிவாக ஆனால் பணிவுடன், 'அரசே! என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் பூனைக்குப் பாலூற்றிப் போற்றி வளர்ப்பதைவிட குடிமக்கள் அனைவருக்கும் பாலுணவு கிடைக்கும்படி பராமரிப்பதே மன்னனின் முதற் கடமையென்று கருதுகிறேன்!' என்றான். இராயர் அவனுடைய புத்தி நுட்பத்தைப் பாராட்டி நூறு பொன் பரிசளித்தார்.

சரியான விடையைத் தேர்ந்தெடு

1. நாட்டில் பெரும் பிரச்சனையை ஏற்படுத்தியது யார்?
   a. எலிகள்
   b. மேலே உள்ள அனைத்தும்
   c. பசுக்கள்
   d. பூனைகள்

2. எலிகள் பிரச்சினையை சரி செய்ய மன்னர் கூறிய வழி என்ன?
   a. மக்களுக்கு பணம் கொடுப்பது
   b. மக்களிடமிருந்து வரி வசூலிப்பது
   c. மக்கள் அனைவரும் ஆளுக்கொரு பூனை வளர்ப்பது

3. தெனாலிராமன் வீட்டில் பசும்பால் குடித்தது யார்?
   a. பூனை
   b. எலி
   c. தெனாலிராமன்

4. ஆய்வுக்கு கொண்டு வரப்பட்டபோது, தெனாலியின் பூனை ___________ இருந்தது.

a. மெலிந்து
b. வலுவாக
c. கொழு-கொழுவென

5. அரசனால் வழங்கப்பட்ட பாலை பூனை ஏன் தொடவில்லை?

a. பால் சூடாக இருக்கும் என்று நினைத்தது
b. அது பசியாக இல்லை
c. ராஜாவைக் கண்டு பயந்தது

## தெனாலிராமன் வளர்த்த குதிரை

பகை நாடான பாமினி சாம்ராஜ்யத்தைக் குதிரைப் படையைக் கொண்டே வெல்ல விரும்பிய கிருஷ்ணதேவராயர் அரேபியாவிலிருந்து ஆயிரம் குதிரைக்குட்டிகளை வரவழைத்தார். அவற்றை குறைந்த செலவில் வளர்க்க வேண்டுமென ஆராய்ந்த மந்திரிசபை. 'தலைநகரிலுள்ள ஒவ்வொரு பிரஜையும் ஒரு குதிரைக் குட்டியை நன்றாக வளர்த்துப் போர்க் குதிரையாக்க வேண்டும்.

அதற்காக தினமொன்றிற்கு கொள்ளு முதலான செலவுகளுக்கு மூன்று வராகன் பொன் கொடுக்கப்படும். குதிரைகளின் ஊட்டமான வளர்ச்சியை மூன்று மாதத்திற்கு ஒருமுறை மன்னரிடம் கொண்டு வந்து காட்ட வேண்டும்' என்று உத்தரவிட்டது. அதன்படி தெனாலிராமனுக்கும் ஒரு குதிரைக் குட்டியை வளர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் அவன் தினந்தோறும் மூன்று வராகன்களை அரண்மனையிலிருந்து வாங்கிவந்து குடும்பத்திற்குச் செலவு செய்துவிட்டு, குதிரையைத் தன் கொல்லையில் கட்டி, அதைச் சுற்றி நாற்புறமும் சுவர் எழுப்பி, அதன் முகத்திற்கு நேராகச் சுவரில் ஒரு சிறு துவாரம் செய்து வைத்திருந்தான்.

தன் வீட்டின் தினந்தோறும் காய்ந்த புல்லை மட்டும் அந்த துவாரத்தின் வழியாகக் கொடுத்து வந்தான். குதிரைக் குட்டியும் பசி தாங்காமல் அதை 'லபக்' கென்று பிடுங்கிக் கொள்ளும். இப்படியாக அந்தக் குதிரை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பசிபட்டினியால் வாடி வதங்கி வந்தது. மூன்று மாதங்கள் சென்றதும், அரசர் முன்னர் அறிவித்திருந்தபடி மன்னர் பார்வை இடுவதற்காக தெனாலிராமனின் குதிரையைத் தவிர மற்றெல்லாக் குதிரைகளும் அரண்மனைக்கு வந்திருந்தன.

எல்லாம் மேனி மினுமினுக்க, எலும்பே தெரியாமல் சதைப்பிடிப்பாக இருந்தன. மிக்க மகிழ்ச்சியடைந்த இராயர், 'தெனாலி ராமா! உன் குதிரையை மட்டும் ஏன் கொண்டு வரவில்லை?' என்று கேட்டார். அதற்கு, 'அரசே, அந்தப் பொல்லாத முரட்டுக் குதிரையை என்னால் பிடித்துக் கொண்டு வரமுடியாது! உங்கள் குதிரை லாயத் தலைவரை அனுப்பினால் ஒரு வேளை அதைப் பிடித்துக்கொண்டு வரமுடியும்!' என்றான் தெனாலிராமன். 'அவ்வளவு பலமான குதிரையாகவா வளர்த்திருக்கிறாய்?' என்று வியப்புற்ற இராயர் உடனே அந்தக் குதிரையைப் பிடித்துக்கொண்டு வரும்படி குதிரை லாயத்தலைவரான ஒரு அரேபிய வர்த்தகனை அனுப்பினார்.

அந்த அதிகாரிக்கு செந்நிறமான ஒரு முழ நீள தாடியுண்டு. அந்த அதிகாரி ராமனுடன் சென்று புல்லைக் கொடுக்கும் துவாரத்தின் வழியாக குதிரையை எட்டி பார்த்தபோது. உள்ளேயிருந்த குதிரை தனக்கு வழக்கமாகப் புல் தரப்படுகிறது என்றெண்ணி, அந்த அதிகாரியின் தாடியை லபக் என்று கெட்டியாகப் பிடித்து இழுத்தது. அதிகாரி அலறித் துடித்தார். உடனே உதவிக்கு அரண்மனையில் இருந்து ஓடிவந்த ஆட்கள் அந்த அதிகாரியின் தாடியை குதிரையின் வாய்ப்பிடியிலிருந்து கத்தரித்து விடுவித்து விட்டு குதிரையையும் வெளிப்படுத்தி இழுத்தார்கள். எலும்பும், தோலுமாய் நடக்கக் கூடச் சக்தியற்றிருந்த அந்தக் குதிரை இருந்த இடத்தைவிட்டு நகரக்கூட மறுத்தது. அதனால் மேலும் அரசாங்க சிப்பாய்கள் வந்து அக்குதிரையை பின்னாலிருந்து நான்குபேர் தள்ள முன்னாலிருந்து நான்கு பேர் இழுக்க, வெகு சிரமத்துடன் கொண்டுவந்து இராயர் முன் நிறுத்தினார்கள். அதைக் கண்டு ஆத்திரப்பட்டார் இராயர். 'தெனாலி ராமா! சரியாகத் தீனி போடாமல் குதிரையை ஏன் இப்படி வளர்த்தாய்?' என்று கேட்டார்.

அதற்கு தெனாலிராமன், 'அரசே! நான் கொஞ்சத் தீனி போட்டு வளர்த்ததற்கே இந்தப் பொல்லாத குதிரை திமிர்ப்பிடித்து உங்கள் லாயத் தலைவரின் தாடியைப் பிடித்துக் கொண்டு விடாமல் போராடவும், அதைப் பின்னாலிருந்து நான்குபேர் தள்ளவும் முன்னாலிருந்து நான்குபேர் இழுக்கவும் நேரிட்டதே? அதற்கு அதிகமாகத் தீனிப் போட்டு வளர்த்திருந்தால் அது எத்தனை பேர் தாடிகளைப் பிடித்து இழுத்திருக்கும்! அதைப் போர்க்களத்திற்கு நகர்த்த எத்தனை பேர் தேவைப்பட்டிருக்கும்! மேலும் குதிரைகளின் தீனிக்காகத் தங்கள் சாப்பாட்டைச் சுருக்கி குதிரை வளர்த்த மற்றவர்களைப் போல நானும் மெலிந்துபோக நேரிட்டிருக்குமே!' என்றான்.

அதைக் கேட்டுச் சிரித்த இராயர், 'குதிரைகளை வளர்ப்பதிலும் இராணுவத்தை வளர்ப்பதிலும் கவனம் செலுத்துவதைவிட அரசாங்கம் தன் குடிமக்களின் உணவு

நலத்தில் அதிக அக்கறை கொள்ள வேண்டும்!' என்பதை தெனாலிராமனின் குறிப்பினால் உணர்ந்து வெட்கினார்.

சரியான விடையை தேர்ந்தெடு

1. பாமினி சாம்ராஜ்யத்தை வெல்ல விரும்பியவர் யார்?
a. கிருஷ்ணதேவராயர்
b. வீரர்கள்
c. தெனாலிராமன்
d. மக்கள்

2. மன்னர் எதை விரிவுபடுத்த விரும்பினார்?
a. போர்வீரர்கள்
b. யானைப்படை
c. குதிரைப்படை

3. தெனாலிராமன் தனது குதிரையை எப்படி நடத்தினார்?
a. சூடான வைக்கோலைக் கொடுத்தார்
b. ஈரமான வைக்கோலைக் கொடுத்தார்
c. மிகக்குறைந்த வைக்கோலைக் கொடுத்தார்

4. குதிரைக்கு _________ வழியாக உணவளிக்கப்பட்டது.
a. கதவு
b. ஜன்னல்
c. துளை

5. தலைமை ஆய்வாளருக்கு நீண்ட _______ இருந்தது.
a. மீசை
b. முடி
c. தாடி
d. மூக்கு

விறகுவெட்டியும் கோடரியும்



ஓர் ஊரில் நல்லான் என்ற விறகு வெட்டி ஒருவன் இருந்தான். அவனுக்கு விறகு வெட்டுவதைத் தவிர வேறு தொழில் எதுவும் தெரியாது. காட்டுக்குச் சென்று தூக்க முடிந்த அளவுக்கு மரக்கிளைகளை வெட்டி எடுத்து வருவான். அவற்றை விற்று வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கிச் செல்வான். அவனது மனைவியும், இரு குழந்தைகளும் இவனது உழைப்பை நம்பித்தான் வாழ்ந்து வந்தனர்.

ஒருநாள் ஆற்றின் கரையோரமாக இருந்த ஒரு மரத்தின் கிளைகளை வெட்டிக் கொண்டிருந்தான். அப்போது அவனது இரும்புக் கோடரி தவறி ஆற்றில் விழுந்துவிட்டது. அவனால் கோடரியைத் தேட முடியவில்லை.என்ன செய்வது என்று கவலையோடு அமர்ந்திருந்தான்.

அப்போது ஒரு தேவதை எதிரில் தோன்றியது. நல்லானைப் பார்த்து "ஏன் அழுகிறாய்?" என்று கேட்டது. என் தொழிலுக்கு மூலதனமான கோடரி ஆற்றில் விழுந்துவிட்டது. இனி பிழைப்புக்கு என்ன செய்வேன்?" என்று கூறி மேலும் பலமாக அழுதான்.

ஒரு தங்கக் கோடரியை எடுத்து வந்து நல்லானிடம் கொடுத்தது. இது தங்கக் கோடரி. இது என்னுடையது அல்ல" என்றான் நல்லான். மறுபடியும் ஆற்றில் குதித்து ஒரு வெள்ளிக்கோடரியை எடுத்து வந்து நல்லானிடம் கொடுத்தது தேவதை. இது வெள்ளிக் கோடரி. இதுவும் என்னுடையது அல்ல" என்றான் நல்லான். மீண்டும் நீரில் குதித்து ஒரு இரும்புக் கோடரியை எடுத்து வந்து கொடுத்தது தேவதை. இதுதான் என்னுடையது" என்று நன்றி கூறிப் பெற்றுக் கொண்டான் நல்லான்.

நல்லான் உண்மை பேசியதால் மகிழ்ச்சியடைந்த தேவதை, தங்கம், வெள்ளிக் கோடரிகளையும் அவனிடமே கொடுத்து விற்றுப் பிழைத்துக்கொள்" என்று சொல்லி மறைந்து போனது.

சரியான விடையை தேர்ந்தெடு

1. விறகுவெட்டி சென்ற இடம் எது?
a. காடு
b. கிராமம்
c. வயல்

2. ஆற்றில் விழுந்த கோடரியை எடுக்க முடியாமல் போக காரணம் என்ன?
a. ஆற்றில் நீர் குளிர்ச்சியாக இருந்தது
b. ஆழம் அதிகமாக இருந்ததால்

3. விறகுவெட்டி எப்படிப்பட்ட குணமுடையவர்?
a. நேர்மையானவர்
b. சோம்பேறி
c. பொறாமை கொண்டவர்

4. விறகுவெட்டிக்கு உதவியது யார்?
a. ஊர் மக்கள்
b. நண்பர்
c. கடவுள்

5. இறுதியில் விறகுவெட்டிக்கு எத்தனை கோடரிகள் கிடைத்தன?
a. மூன்று
b. ஒன்று
c. இரண்டு

6. கீழ்க்கண்டவற்றில் விலைமதிப்புள்ள கோடரி எது ?
a. தங்கம்
b. வெள்ளி
c. இரும்பு

## புத்திசாலி காகம்



ஒரு நாள் கடுமையாக வெயில் அடித்து கொண்டிருந்தது. அப்போது ஒரு காகம் மிகுந்த தாகத்துடன் இருந்தது. தண்ணீருக்காக அது இங்கும் அங்கும் தேடித் தேடி அலைந்தது. ஆனால் பாவம் அதற்கு எங்குமே தண்ணீர் கிடைக்கவில்லை. அப்போது தொலைவில் ஒரு பானையில் சிறிது தண்ணீர் இருப்பதை கண்டு மிகவும் சந்தோஷபட்டது.

அது பானைக்குள் இருந்த தண்ணீரை குடிக்க முயற்சி செய்தது. ஆனால் தண்ணீர் சிறிதளவே இருந்ததால் அதனால் குடிக்க இயலவில்லை. காகம் பலவாறாக முயற்சி செய்தது. ஆனால் பானையின் அடி வரை அதன் அலகு எட்டவில்லை. அப்போது அதற்கு ஒரு யோசனை தோன்றியது.

தண்ணிரை சுற்றி கிடந்த சிறிய கற்களை அந்த பானைக்குள் ஒன்றன் பின் ஒன்றாக போட்டது. தண்ணீரும் மேலே வர ஆரம்பித்தது. இப்படியாக மேலே வந்த தண்ணீரை காகம் குடித்து தாகத்தை போக்கியது. பின் அங்கிருந்து சந்தோஷமாக பறந்து சென்றது.

### சரியான விடையை தேர்ந்தெடு

1. காகம் எதைத் தேடிக்கொண்டிருந்தது?
a. குச்சி
b. தண்ணீர்
c. உணவு

2. காகத்தின் கண்களில் தென்பட்டது என்ன?
a. தண்ணீர் தொட்டி
b. தண்ணீர் குடம்
c. தண்ணீர் பானை

3. தண்ணீர் பானையின் கழுத்து பகுதி _______ இருந்தது.
a. மிகவும் குறுகலாக
b. ஆழமாக
c. அகலமாக

4. கூழாங்கற்களை பானையில் விட்டபோது என்ன நடந்தது?
a. குடம் உடைந்தது
b. எதுவும் நடக்கவில்லை
c. பானையில் நீர்மட்டம் அதிகரித்தது

5. கதையின் இறுதியில் காகம் _______ இருந்தது.
a. சோகமாக
b. கவலையாக
c. மகிழ்ச்சியாக

6. கதை உணர்த்தும் நீதி என்ன?
a. நமது மூளையைப் பயன்படுத்தி யோசித்தால், நம் பிரச்சனைக்கு தீர்வு காணலாம்.
b. வெப்பமான நாளில் நாம் வெளியே செல்லக்கூடாது.
c. வெளியே செல்லும் போது எப்போதும் கூழாங்கற்களை எடுத்துச் செல்லுங்கள்.

## நரியும் திராட்சையும்



ஒரு காட்டில் நரி ஒன்று மிகவும் தாகத்துடன் நடந்து வந்துக் கொண்டிருந்தது. அப்போது ஒரு கொடியில் திராட்சைப் பழங்கள் கொத்துக் கொத்தாய் பழுத்திருந்ததை அது பார்த்தது. நம் தாகத்திற்கு ஏற்றது இந்த திராட்சைப் பழங்கள் என எண்ணியது. ஆனால் பழங்கள் சற்று உயரத்தில் நரிக்கு எட்டாத இடத்தில் இருந்தது.

நரி சில அடிகள் பின்னுக்குச் சென்று வேகமாக ஓடி வந்து குதித்து பழங்களைப் பறிக்க எண்ணியது. ஆனால் வெற்றி கிடைக்கவில்லை.

அதுபோல சிலமுறை செய்தும், அதனால் பழங்களை பறிக்க முடியவில்லை. தன்னால் எட்ட முடியாத, தனக்குக் கிடைக்காத அந்த திராட்சைப் பழங்கள் புளிக்கும் என தனக்குத்தானே ஆறுதல் கூறிக்கொண்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தது.

நமக்குக் கிடைக்காத பொருள் ஒன்றின் மீது தவறு கண்டுபிடிக்கும் குணம் கூடாது. மேலும் நரி தன் மூளையை உபயோகித்து வேறு வழிகளிலும் முயன்றிருந்தால் பழம் அதற்குக் கிடைத்திருக்கும்.

## கரடி மற்றும் இரண்டு நண்பர்கள்



விஜய் மற்றும் ராஜு நண்பர்கள். ஒரு விடுமுறையில் அவர்கள் ஒரு காட்டுக்குள் சென்றார்கள். அவர்கள் இயற்கையின் அழகை அனுபவித்துக்கொண்டிருந்தார்கள். திடீரென்று ஒரு கரடி அவர்கள் மீது வருவதைக் கண்டார்கள். அவர்கள் பயந்தார்கள்.

மரங்கள் ஏறுவதை அறிந்த ராஜு ஒரு மரம் வரை ஓடி விரைவாக மேலே ஏறினான். அவர் விஜயைப் பற்றி நினைக்கவில்லை. விஜய்க்கு மரம் ஏறுவது தெரியாது. விஜய் ஒரு நொடி யோசித்தான். விலங்குகள் இறந்த உடல்களை விரும்புவதில்லை என்று அவர் கேள்விப்பட்டிருந்தார். அவர் தரையில் விழுந்து மூச்சைப் பிடித்தார்.

கரடி அவனைப் பற்றிக் கொண்டு அவர் இறந்துவிட்டதாக நினைத்தார். எனவே, அவர் சென்றார். ராஜு விஜயிடம், 'கரடி உங்கள் காதுகளில் என்ன கிசுகிசுத்தது?' அதற்கு பதிலளித்த விஜய், 'உங்களைப் போன்ற நண்பர்களிடமிருந்து விலகி இருக்க கரடி என்னிடம் கேட்டது' என்று கூறி தனது வழியில் சென்றார்.

*நீதி: 'ஆபத்தில் உதவும் நண்பனே உண்மையான நண்பன்.'*

### சரியான விடையை தேர்ந்தெடு

1. நண்பர்கள் இருவரும் எங்கு சென்றார்கள்?

a. காடு

b. வீடு

c. பள்ளிக்கூடம்

2. நண்பர்கள் வழியில் சந்தித்த விலங்கு எது?

a. கரடி

b. சிங்கம்

c. குரங்கு

3. விஜய் ஏன் மரத்தில் ஏறவில்லை?

a. விஜய்க்கு மரம் ஏறத் தெரியாது

b. விஜய்க்கு மிகவும் களைப்பாக இருந்தது

c. மரத்தில் இடம் இல்லை

4. கரடி ஏன் சிறுவனை விட்டுவிட்டது?

a. கரடிக்கு பசி இல்லை

b. விஜய் தூங்குகிறான் என்று நினைத்தது

c. விஜய் இறந்துவிட்டான் என்று நினைத்தது

5. கதையின் மையக்கருத்து என்ன?

a. உண்மையான நண்பர்கள் ஒருவருக்கொருவர் ஆதரவளிக்க வேண்டும்

b. கரடி நெருங்கும்போது அசையாமல் படுத்துக் கொள்ள வேண்டும்

c. காட்டுக்குள் செல்ல வேண்டாம்

# வார்த்தை தேடல்

கீழே கொடுக்க பட்டுள்ள வாகனங்களை கண்டுபிடிக்கவும்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ப | ஔ | ஃ | ழ | ங | க | ம | தொ |
| ஆ | ட | ப | ம | ப் | உ | கி | ட |
| ஆ | ஒ | கு | ப | ஔ | ந | ழு | ர் |
| ஞ | ற | ல் | ஞ | ய | ழ | ந் | வ |
| ஞ | வி | ங | பே | ரு | ந் | து | ண் |
| ர | க | மா | மி | தி | வ | ண் | டி |
| ண | ற | ஊ | ன | ல | க | ஏ | ஈ |
| க | உ | ன | அ | ம் | ந | த | ந |

தொடர்வண்டி, மிதிவண்டி, பேருந்து, மகிழுந்து, படகு, விமானம், கப்பல்

கீழே கொடுக்க பட்டுள்ள மலர்களை கண்டுபிடிக்கவும்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ம | ஃ | ந | க | ஈ | மு | ல் | லை |
| ஞ | ல் | ஒ | ன | த | தா | சா | க |
| சூ | ந | லி | கா | ஈ | ஞ | ம | ஊ |
| ரி | ஐ | ச | ம் | ஏ | ஈ | ந் | ரை |
| ய | செ | ம் | ப | ரு | த் | தி | உ |
| கா | ஐ | ப | ர | இ | ஔ | ங | ஏ |
| ந் | உ | ங் | ம் | தா | ழ | ம் | பூ |
| தி | ஔ | கி | ப | அ | அ | த | ஞ |

தாமரை, சாமந்தி, செம்பருத்தி, சூரியகாந்தி, கனகாம்பரம், முல்லை, சம்பங்கி, தாழம்பூ, மல்லி

காய்கறிகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| த | ல | இ | வ | ஈ | ஊ | ப | சோ |
| ஆ | க் | த | அ | வ | ரை | ர | ள |
| ண | ம | கா | வெ | ங் | கா | ய | ம் |
| வெ | ஞ | எ | ளி | பூ | உ | அ | ன |
| ள் | ஈ | க | ச | ண் | ய | ரு | ஆ |
| ள | உ | ணி | த் | டு | ப | மு | ளை |
| ரி | உ | அ | ங | தி | த | ட் | எ |
| க் | ஃ | ச | எ | இ | ரி | டை | ஊ |
| கா | ர | ட் | வ | ஞ் | ழ | கோ | எ |
| ய் | ஔ | ச | ய | சி | ள | சு | ல |

உருளை, முட்டைகோசு, வெள்ளரிக்காய், காரட், சோளம், வெங்காயம், தக்காளி, பூண்டு, இஞ்சி, பூசணி, கத்திரி, அவரை

சிறு விலங்குகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஈ | ர | ழ | மீ | ள | ஆ | ஞ | ம |
| எ | ச | அ | ன் | எ | அ | மை | ட |
| ஔ | ஞ | ல் | ல | ஔ | ஊ | ஏ | ற |
| த | வ | ளை | ட | உ | ந | ந | ஔ |
| ஐ | எ | ஃ | அ | ய | வ | ண் | உ |
| பா | று | ப | ற | ணி | ண | உ | டு |
| ஆ | ம் | உ | ண | ஈ | ல் | ஊ | ஒ |
| ற | பு | பு | வ | ஐ | எ | லி | ஐ |

மீன், தவளை, நண்டு, பாம்பு, அணில், ஆமை, எலி, ஈசல், எறும்பு

## பழங்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| த | தி | ல | த | அ | ன் | னா | சி |
| ப | அ | ரா | ற | ர் | ஈ | த | ஆ |
| ப் | ட | ல | ட் | ஞ | பூ | உ | ப |
| பா | மா | து | ளை | சை | ங | ச | ள |
| ளி | ம் | த | ஆ | ர | ஞ் | சு | ணி |
| ல | ப | லா | ப் | ப | ழ | ம் | ண |
| எ | ழ | ற | பி | ப | ள | ச | இ |
| ன | ம் | ங | ள் | எ | கொ | ய் | யா |

ஆப்பிள், ஆரஞ்சு, தர்பூசணி, மாம்பழம், பலாப்பழம், திராட்சை, பப்பாளி, கொய்யா, மாதுளை, அன்னாசி

## தொழில்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| உ | ச | ட | சி | கு | ச | ஈ | ஃ |
| ர | ழ | ஒ | ற் | ங | ய | த | த |
| த | ர | வ | பி | ஔ | ந | வ | உ |
| ஓ | வி | ய | ர் | வ | ணி | க | ர் |
| மீ | ம | ரு | த் | து | வ | ர் | ங |
| ல | ன | ஆ | ஆ | ட | ஓ | வ | ள |
| ழ | ள | வ | ஓ | ட் | டு | ந | ர் |
| த | ச் | ச | ர் | ஓ | வி | மா | னி |

உழவர், விமானி, ஓவியர், வணிகர், குயவர், மீனவர், தச்சர், சிற்பி, மருத்துவர், ஓட்டுநர்

## பறவைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மை | ந | ம | ர | ங் | கொ | த் | தி |
| ங | னா | ஞ | பு | றா | அ | ம | சி |
| கா | கி | எ | வா | ய | ந | ஞ | ட் |
| க | ஓ | ளி | த் | ஆ | கோ | எ | டு |
| ம் | ம | ச | து | ல | ழி | ஏ | க் |
| சே | ல | கு | ஆ | கொ | ள | ப | கு |
| ஔ | வ | யி | அ | ங | க் | ஏ | ரு |
| ம | யி | ல் | ப | ல | ஈ | கு | வி |

சிட்டுக்குருவி, மரங்கொத்தி, குயில், மயில், கொக்கு, சேவல், மைனா, புறா, காகம், வாத்து, கோழி, கிளி

## கிழமை: தேடுக

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செ | ன | கி | டே | ல | வெ |
| ய | வ் | தி | ங் | க | ள் |
| து | ச | வா | ஞ் | ர | ளி |
| டு | வ | ஞா | ய் | ம் | தா |
| பு | யி | ள் | பு | தா | டி |
| று | ய | க் | த | ச | னி |
| வி | யா | ழ | ன் | ழ | ய் |

## தமிழ் மாதங்கள் - தேடுக

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| டீ | மா | சி | ள | டி | வை | ர | வ |
| கா | ர் | த் | தி | கை | க் | கா | கே |
| ட் | க | ப | தை | ஃ | ஆ | பு | சி |
| ட் | ழி | ப | ங் | கு | னி | ர | ஞ் |
| சி | கு | து | ஆ | வ | ணி | ட் | ம் |
| வ | த் | டி | டி | வ | பு | டா | கே |
| ப் | ர் | தி | ஐ | ப் | ப | சி | கி |
| ங | தி | ள் | ரை | தா | ம | ற | ம் |

## தலைவர்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ரா | உ | ப | க | த் | சி | ங் | வ |
| ஜ | சா | ஸ் | தி | ரி | ம | ஜ | ல் |
| கோ | ல | ச | ச | ப | கா | ஔ | ல |
| பா | ட் | ல | ந் | ஏ | த் | நே | பா |
| லா | சு | க | தி | ஏ | மா | ரு | ய் |
| ச் | மி | ந | ர | ண | கா | ஓ | ப |
| சா | பா | ழ | போ | ஈ | ந் | ர | டே |
| ரி | ய் | ஜ | ஸ் | இ | தி | க | ல் |

ராஜகோபாலாச்சாரி, சாஸ்திரி, வல்லபாய்படேல், மகாத்மாகாந்தி, பகத்சிங், லட்சுமிபாய், சந்திரபோஸ், நேரு

## புலவர்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பா | ர | தி | தா | ச | ன் | ஜ |
| ர | ஔ | வை | யா | ர் | ம | ஆ |
| தி | ரு | வ | ள் | ளு | வ | ர் |
| யா | ஓ | க | ம் | ப | ர் | ஓ |
| ர் | ன் | ச | தா | ணி | வா | ன |

பாரதிதாசன், பாரதியார், வாணிதாசன், திருவள்ளுவர், கம்பர், ஔவையார்

## இலக்கியங்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சி | ல | ப் | ப | தி | கா | ர | ம் |
| தொ | ல் | கா | ப் | பி | ய | ம் | தி |
| ஆ | ஒ | ழ | உ | இ | ய | த | ரு |
| த் | ல | ஓ | ஐ | ம | ஆ | ல | க் |
| தி | ம | கா | பா | ர | த | ம் | கு |
| சூ | ஆ | ன | ல | ஐ | ஆ | ஒ | ற |
| டி | எ | நா | ல | டி | யா | ர் | ள் |
| க | ம் | ப | ரா | மா | ய | ண | ம் |

கம்பராமாயணம், சிலப்பதிகாரம், நாலடியார், திருக்குறள், ஆத்திசூடி, தொல்காப்பியம், மகாபாரதம்

## எண்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இ | ஃ | ஐ | இ | மூ | ன் | று |
| ர | ச | ஏ | ழு | ஊ | ம | ப |
| ண் | ப | த் | து | ல | நா | ண |
| டு | ஈ | டு | ள | ஒ | ன் | ச |
| ஷ | ட் | ஒ | ன் | று | கு | ஒ |
| எ | ஏ | ஓ | ஆ | க | ஒ | ன் |
| எ | ஞ | ஹ | ஒ | று | ள | ப |
| ஐ | ந் | து | ஊ | ஸ | ச | து |

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து

## திருக்குறள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ன | ள் | தி | ரு | க் | கு | ற | ள் |
| உ | ல | க | ப் | பொ | து | ம | றை |
| ட | ஸ | ண | ங் | ஏ | ம | ஓ | ஏ |
| ஃ | ஆ | இ | ச | ர | ச | த | ச |
| பொ | ரு | ட் | பா | ல் | கா | ஹ | எ |
| எ | ஹ | ஷ | க | ழ | க | தி | ஏ |
| அ | ற | த் | து | ப் | பா | ல் | அ |
| ல் | பா | ப் | து | த் | ப | ன் | இ |

உலகப்பொதுமறை, திருக்குறள், இன்பத்துப்பால், அதிகாரங்கள், அறத்துப்பால், பொருட்பால்

## எண்கள்-1

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆ | ர | ள | ஊ | ஜ | ஐ | மு | ப் | ப | து |
| யி | ஆ | ப | த் | து | ஒ | ம் | ழ | ஔ | ஆ |
| ர | ற | ஏ | று | ங | ல | அ | ப | ஆ | க |
| ம் | வ | நூ | ப | ண | ட் | வ | ஏ | து | இ |
| ஸ | ற | ஒ | ன் | று | ச | ள | க | ஔ | ரு |
| எ | ஏ | அ | ஓ | ல | ம் | நா | ஹ | தொ | ப |
| ண் | கோ | டி | று | ஓ | ஜ | ற் | எ | ண் | து |
| ப | ஹ | ச | இ | ப | ய | ப | மு | ணூ | ஷ |
| து | ஊ | ஆ | ஞ | ஆ | து | து | ப | று | ஏ |
| ப | த் | தா | யி | ர | ம் | ஆ | து | ண | அ |

ஒன்று, ஆயிரம், லட்சம், பத்து, நூறு, கோடி, பத்தாயிரம், இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது, அறுபது, எழுபது, எண்பது, தொண்ணூறு

## பாரம்பரிய விளையாட்டுகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தா | ய | ம் | ஒ | த | ஐ | கு | ம் | மி |
| ஏ | க | ர | ட | உ | றி | ய | டி | க |
| ம் | ஸ | ர | ஏ | ட் | ஷ | ஞ | அ | ண் |
| ஊ | ர | ஈ | ஆ | ஔ | பா | ஸ | ழ | ணா |
| வ | அ | ப | க | டு | ஷ | ம் | ர | மு |
| நொ | ஃ | பா | ம் | ன | பு | க | ல | ச் |
| ஏ | ண் | ண் | ம | ப | ஈ | லி | ர | சி |
| ஊ | ய | டி | ஃ | கோ | லா | ட் | ட | ம் |
| ம | ஸ | ஷ | ப | ல் | லா | ங் | கு | ழி |

தாயம், பல்லாங்குழி, பாண்டி, கோலாட்டம், சிலம்பாட்டம், கண்ணாமூச்சி, உறியடி, கும்மி, ஆடுபுலி, பம்பரம், நொண்டி

### பயிற்சி-1

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஓ | பெ | அ | க | ள | வெ | ள | ங |
| ஈ | ரி | ச | வ | த | உ | ற் | ன |
| ட | ய | உ | லை | ங | ஊ | ந | றி |
| சே | ள | ண் | க | இ | னி | ப் | பு |
| ல | ர் | மை | த | ன் | ள | இ | ள |
| க | ல | த் | ஆ | ப | உ | மை | மு |
| ஐ | ள | ஐ | து | ம் | ம | ஃ | டி |
| ஏ | ற் | ற | ம் | ற | ச | ஊ | வு |

பெரிய, வெற்றி, கவலை, சேர்த்து, இனிப்பு, இன்பம், இளமை, ஏற்றம், முடிவு, உண்மை

### பயிற்சி-2

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| உ | த | ஒ | ய | மூ | ல | உ | அ |
| அ | ண | ஆ | ர | வா | ய | ங | ப |
| நெ | ப | வ | ள | யி | ய | ம | ல |
| டு | ழ | ய | க | ர | ஔ | வ | ஓ |
| நா | மை | ஃ | த | ம் | உ | ஏ | ஈ |
| ள் | யா | அ | ரா | அ | ற | வ | ழி |
| ய | ன | ச | டை | செ | ம் | மொ | ழி |
| இ | ட | மி | ன் | றி | ன | ல | ள |

உணவகம், கதராடை, மூவாயிரம், அறவழி, நெடுநாள், இடமின்றி, செம்மொழி, பழமையான

### பயிற்சி-3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | பே | ரு | ந் | து | மெ |
| ட் | தே | ங் | கா | ய் | ழு |
| டெ | வெ | ல் | ல | ம் | கு |
| று | பெ | ஆ | மே | சே | வ |
| ம் | ட் | தே | ள | வ | த் |
| பு | டி | ள் | ம் | ல் | தி |

கட்டெறும்பு, பேருந்து, மெழுகுவத்தி, தேங்காய், வெல்லம், பெட்டி, தேள், மேளம், சேவல்

### பயிற்சி-4

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| தொ | க | க | ட | ற் | க | ரை | வ |
| ஜ | ட் | ர | தே | இ | நி | லா | ண் |
| ம | ட | டா | ச | ன் | ல | ஐ | ண |
| ண் | ஒ | ழு | சி | ண | கூ | க | க் |
| சா | ற் | ப | ட | ணு | ம | டு | கு |
| லை | று | ன | ற | ந | ங் | உ | மி |
| அ | மை | ங | ல | வை | ஸ | கி | ழ் |

தொட்டாசிணுங்கி, வண்ணக்குமிழ், மண்சாலை, கடற்கரை, தேன்கூடு, ஒற்றுமை, பறவை, நிலா

## குறுக்கெழுத்து

### குறுக்கெழுத்து - 1

***Across***

1 : இரவின் நிறம் (4)

2 : மிக சிறிய செடி (2)

3 : சத்தம் (2)

4 : முகிலின் நிறம் (3)

6 : வானின் நிறம் (3)

7 : அரசியல் மாற்றத்தின் போது உபயோகிக்க படும் சொல் (4)

9 : வாழைப்பழத்தின் நிறம் (4)

***Down***

1 : பொங்கலன்று பற்களால் கடித்து உண்ண படுவது (4)

5 : இலையின் நிறம் (3)

8 : பசு - ஆண்பால் (2)

10 : பயம் (4)

11 : உதிரத்தின் நிறம் (4)



## குறுக்கெழுத்து - 2



***Across***

1 : _____ செய விரும்பு (3)

2 : சத்தமில்லாத சிரிப்பு (4)

3 : ஒருவகை பழம் - இலையோடு விற்கப்படும் (4)

4 : ஏற்பது ___________ (5)

5 : எட்டுக்கால் பூச்சி (4)

7 : பெரிய ஆசை (3)

9 : ஆறுவது ________ (3)

***Down***

1 : பாசம் (3)

6 : **Mobile phone** - தமிழாக்கம் (3)

8 : அழகான ________ (4)

10 : கேள்வி கேட்டால் சொல்ல படுவது (3)

11 : ______ இட்டு உண் (3)

## எதிர்ச்சொல்



***Across***

1 : தீமைகள் (5)

2 : பழைமை (3)

3 : முதுமை (3)

7 : செயற்கை (4)

8 : தொடக்கம் (3)

***Down***

1 : பகை (3)

4 : இன்பம் (4)

5 : பொய் (3)

6 : இனிப்பு (4)

9 : இறக்கம் (4)

10 : தோற்றம் (3)

## உயிரினம்



***Across***

1 : காட்டில் வாழும் பெரிய விலங்கு (2)

2 : பாலைவன கப்பல் (5)

3 : தரையில் மெதுவாகவும், நீரில் வேகமாகவும் செல்வான் (3)

6 : சாலையை கடக்கும் போது நினைவில் இருக்கும் விலங்கு (6)

7 : மரத்தில் வாழும் விலங்கு (4)

10 : பாடும் பறவை (4)

11 : தேசிய பறவை (3)

***Down***

4 : எலியின் எதிரி (2)

5 : _____ தன்வாயால் கெடும் - என்பது பழமொழி (3)

8 : இரண்டு கால்களால் நடக்கும் விலங்கு (3)

9 : காட்டு ராஜா (4)

12 : ஒரு நாள் மட்டும் வாழும் சிறு உயிரினம் (3)

13 : முருகனின் கொடி (3)

காய் கனிகள்




***Across***

1 : வெயில் காலத்தில் மட்டும் கிடைக்கும் பழம் (5)

3 : கண் கலங்க வைக்கும் காய் (6)

4 : மிளகு போல் விதைகளை கொண்ட மஞ்சள் நிற பழம் (4)

***Down***

1 : பழம் முழுக்க சிவப்பு முத்துக்கள் (3)

2 : பழங்களிலே பெரிய பழம் (6)

3 : பச்சை பெட்டிக்குள் வெள்ளை முத்துக்கள் (4)

5 : சமையலுக்கு பயன்படும் பழம் (4)